முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 4-12-59 | வெள்ளி | ஒலி: 62

தலைநகர், நமக்கு!

தலைகுனிவு, அவர்களுக்கு!

சென்னை நகர மன்றத் தலைமைப் பீடத்திலிருந்து தோழர் அரசு விலக, அந்த இடத்திலே அப்துல் காதர் அமர்ந்திருக்கிறார்!

பல்லாண்டு காலமாக காங்கிரசார் ஆதிக்கத்திலிருந்த நகர நிர்வாகத்தை திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களிடம் தலைநகர் ஒப்புவித்தது சென்ற ஆறு திங்களுக்கு முன்பு!

வெற்றிவாகை சூடி, வாழ்த்தொலி விண்ணைமுட்டி மோத அரசு பெற்ற அந்த அரசு, நீதி வழுவாமல்—நெறி பிழறாமல் ஆட்சி நடத்திய பின், தோழர் அப்துல் காதரின் சீரிய தலைமையை விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கிறது, கொள்கை உரம் கொண்ட சென்னை நகர்!

பிச்சைக்காரப் பரம்பரை என்று கேலி சுமத்தியோரின் கொள்ளிக் கண்கள், இருட்டிலே உலவும் நரியின் விழிகளைப்போல் அந்தப் பீடத்தைச் சுற்றி வட்டமிடாமல் இல்லை. அந்தக் கண்களிலே மண் தூவி விட்ட பெருமைகொண்ட மக்கள் தங்கள் புதிய தலைவரைப் பூரிப்போடும் பெருமிதத்தோடும் வரவேற்கிறார்கள்!

[தொடர்ச்சி 12—ம் பக்கம்]

மனிதனின் கதை

பி.சி. கணேசன்

60. தொழிற் புரட்சி

அன்புள்ள மாதுவி,

பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் பிரஞ்சுப் புரட்சி ஏற்பட்டு, உலக வரலாற்றின் போக்கிலும் அரசியல் எண்ணங்களிலும் ஒரு மகத்தான மாறுபாட்டை உண்டாக்கியதைப் போலவே, பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்திலும் மற்றெருவகையான புரட்சிதோன்றி மக்களுடைய சமூக பொருளியல் வாழ்க்கையின் அஸ்திவாரத்தையே ஒரு கலக்குக் கலக்கி, புதிய பொருளியல் கண்ணேட்டமொன்றை ஏற்படுத்தியது.

அந்தப் புரட்சி ஏற்படுத்திய விளைவுகள் இன்றுவரை தொடர் நிகழ்ச்சிகளாய், மனித சமுதாயத்தையே இரு கூறுகளாக்கி வைத்துள்ள விந்தை உலக வரலாற்றில் மிகப்பெரிய நிகழ்ச்சியாகும். பத்தொன்பதாம் நூற்றுண்டின் மிகப் பெரிய இந்த நிகழ்ச்சியைத்தான் 'தொழிற் புரட்சி' என அழைக்கிறேம். இது பிரிட்டனில் தான் முதன் முதல் ஆரம்பமாயிற்று எனக் கருதலாம்!

கடல் கடந்து ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தைக் கட்டிக் காக்க பிரிட்டனுல் முடிந்ததற்குக் காரணமே அதனுடைய மாபெரும் சக்திவாய்ந்த கப்பற்படையாகும். நெப்போலியனின் வீழ்ச்சிக்கும் பிரிட்டனின் கடற் பலமே காரணம். "உலக அரங்கில் தனக்குச் சமமாக நின்று வியாபாரத்திலும் காலனி ஆதிக்கத்திலும போட்டியிடக்கூடிய பிரான்ஸ் வீழ்ச்சியடையவே, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் விரிந்து பரந்து உறுதியான அஸ்திவாரத்தில் வளர்ந்து செழித்தது. இதற்கு முக்கியமான் வேறு சில காரணங்களும் இருந்தன.

முதலாவதாக, பிரிட்டிஷ் மக்களிடம் துணிகரமான முயற்சிகளில் ஈடுபடும் மனத்துணிவு இயற்கையாகவே அமைந்திருந்தது. கொந்தளிக்கும் கடல்களில் சிறிய படகுகளில் ஏறிச் சென்று புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் உயிரை அவர்கள் ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை. கண்டுபிடித்த புதிய பிரதேசங்களில் குடியேறி, அதைத் தங்கள் தாயகமாகவே கருதி வாழவும் அவர்கள் தயங்கியதில்லை. பிரயாண ஆசை அவர்களுடன் கூடப்பிறந்த ஒரு குணம்.

இரண்டாவதாக, பிரிட்டிஷ்காரர்கள் சிறந்த வியாபாரிகள். வெளிநாடுகளில் தங்களுடைய வியாபார நலன்களைப் பெருக்கிக் கொள்ள அவர்கள் அரசாங்கம் ஏற்பாடு செய்துகொடுப்பதை எதிர்பார்த்துக் காத்திருக்கவில்லை. உண்மையாகப் பார்க்கப்போனல் பிரிட்டிஷ் வியாபாரிகள்தான் தாங்கள் அரசாங்கத்துக்கு ஒரு சாம்ராஜ்யத்தையே தேடிக் கொடுத்தார்கள். இந்தியா, கனடா, தென் ஆப்ரிக்கா போன்ற நாடுகள் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் வந்ததே பிரிட்டிஷ் வியாபாரிகளால்தான்!

மூன்ருவதாக, பிரிட்டிஷ் மக்களின் கடலாசை சரித்திரப் பிரசித்திபெற்றது. அவர்களுடைய கவிதைகளும் காவியங்களும் இந்த ஆசையை வெகுவாக சிலாகித்துப் பேசுகின்றன. கடல் தாண்டிப் பரவியிருந்த பிரிட்டிஷ் மக்களை கடல் பிரித்து நின்றது என்பதைவிட இணைத்து நின்றது என்பதே பொருந்தும். விரைந்து செல்லும் கப்பல்களைக் கட்டுவதில் பிரிட்டிஷ்காரர்கள் கைதேர்ந்த நிபுணர்களாயிருந்தார்கள்.

நான்காவதாக, புதிய சாதனங்களையும் கருவிகளையும் கண்டுபிடிப்பதில் பிரிட்டிஷ் மக்கள் தீராத ஆசை உடையவர்களாக இருந்தார்கள். அம்முயற்சியில் எத்தகைய இடர்வரினும் எதிர்த்துச் சமாளிக்கவும் அவர்கள் சளைத்ததில்லை. இந்த முயற்சியின் விளைவாகத்தான் தொழிற் புரட்சியின் வித்துகள் தூவப்பட்டன. உலகம் ஒரு புதிய பாதையில் திரும்பி நடைபோட நேர்ந்தது.

இதுவரையில் மக்களுக்குத் தேவையான பொருட்களெல்லாம் குடிசைத் தொழிலாக கிராமங்களிலேயே தயாரிக்கப்பட்டன. பெரும்பாலும் இந்தப் பொருட்களெல்லாம் கையினுலோ, அல்லது கையால் இயங்கக்கூடிய சிறிய இயந்திரங்களினுலோ செய்யப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் அந்த கிராம மக்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும் பலவகைத் தொழிலாளிகள் இருந்தனர். ஆடை நெய்பவன், பானை வனைபவன், தச்சன்—இப்படிப் பல தொழிலாளர்களும் இருந்தனர். சில மாவட்டங்கள் சில வகையான கச்சாப் பொருட்களின் உற்பத்தியில் சிறந்து விளங்கின. வட அமெரிக்காவிலும் இந்தியாவிலும் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி, லங்காஷயரில் ஆடையாக நெய்யப்பட்டது. துணி உற்பத்தி மிகுதியான அளவில் தேவைப்படவே, குறைந்த காலத்தில் அதிகமாக உற்பத்திசெய்ய புதிய சாதனங்களைக் கண்டுபிடிகக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பல தொழிலாளர்களை ஒரே இடத்தில் ஒன்று கூட்டி வேலை வாங்கும் தொழிற்சாலைகள் தோன்றின. தாங்களே பொருட்களைச் செய்து விற்று வாழ்க்கை நடத்தி வந்த தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் கூலிக்கு வேலைசெய்ய ஆரம்பித்தனர். தொழிற்சாலைகளில் மலிவான விலையில் தரமான பொருட்கள் கிடைக்கவே, கைத்தொழிலை வாழ்க்கை வழியாகக் கொண்டிருந்தவர்கள் தொழிற்சாலைகளோடு போட்டி போட்டுத் தங்கள் பொருட்களை விற்க முடியாத நிலை பிறந்தது.

கிராமத்தில் வாழ்ந்த தொழிலாளர்கள் அனைவரும் நகரத்தில் உள்ள தொழிற்சாலைகளை நம்பி பெருமளவில் நகரங்களில் குடியேற ஆரம்பித்தனர். இங்கிலாந்தில் பெரிய தொழிற்சாலை நகரங்கள் தோன்றின. தொழிற்சாலை வைத்து நடத்தியோர் நிறைய ஊதியம் பெற்றனர். தொழிலாளர்கள் உழைத்துக் கூலி பெறுவதோடு திருப்தியடைய வேண்டியிருந்தது. இதுவே தொழிற் புரட்சியின் முதல் கட்டமாகும்.

இந்நிலையில் குறைந்த உழைப்பில அதிகமான பொருட்களை உற்பத்தி செய்து மிகுதியான லாபம் பெற முடியுமா எனத் தொழிலதிபர்கள் எண்ணத் தலைப்பட்டனர். சில அறிவியல் மேதைகள் புதிய இயந்திர சாதனங்களைக் கண்டுபிடிக்கலாயினர்.

1766-ல் லங்காஷயரைச் சேர்ந்த ஹார் கிரீவ்ஸ் 'ஸ்பின்னிங் ஜென்னி' என்ற கருவியைக் கண்டு பிடித்தார். ஆர்க்ரைட் சக்கரங்களைச் சுழற்ற ஓடும் நீரைப் பயன்படுத்தும் சாதனத்தைக் கண்டறிந்தார். இந்தக் கண்டுபிடிப்பால் அவர் பெரும் பணககாரர் ஆனர். இயந்திர உதவியால் துணி நெய்யும் முறையை எட்மண்ட் கார்ட்ரைட் கண்டறிந்தார். இப்படியாக குறைந்த மனித உழைப்பில் அதிக பலன் கொடுக்கும் இயந்திரங்கள் தோன்றலாயின.

இப்படி இயந்திர சாதனங்கள் வளர்ந்துவரும் சூழ்நிலையில் நீராவி யந்திரங்கள் தோன்றலாயின. நீராவியின் சக்தியைக் கொண்டு கி. மு. முதல் நூற்றுண்டிலேயே அலக்சாண்டிரியாவில் வாழ்ந்த ஹெரோன் என்பவன் விளையாடும் அருவியொன்றை இயக்கிக் காட்டினன்

கி. பி. 1698-ல் தாமஸ் சாவரி என்ற ஆங்கிலேயர் நீராவி இயந்திரமொன்ருல் தண்ணீரை இறைத்துக் காட்டினர்.

பதினுன்காம் லூயியின் காலத்தில் பேபின் எனபவர் நீராவியின் சக்திகொண்டு ஒரு பிஸ்டனை சிலிண்டரில் இயங்கச் செய்தார்.

1705-ல் நியூகோமன் என்ற பெயருள்ள விஞ்ஞானி அதை செம்மையாகச் செயல்பட வைத்தார். ஜேம்ஸ்வாட் கண்டுபிடித்த நீராவி யந்திரம் நீர்இறைக்கவும், ஆலைகளில் இயந்திரங்களை இயக்கவும் பயன்பட்டது. வில்லியம் சீமிங்டன் என்பார் வார்டின் நீராவி இயந்திரத்தைப் படகில் இணைத்து அதை நீரில் ஓடவிட்டார். இதுதான் முதல நீராவிப் படகாகும். இதிலிருந்தே பிறகு நீராவிக் கப்பல்கள் தோன்றலாயின. ராபர்ட் ஃபௌல்டன் என்ற அமெரிக்கர் கட்டிய நீராவிப் படகு முதல் முறையாக அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்தது.

தண்டவாளங்களில் சக்கரங்களை ஓடவைத்து குதிரைகளால் பெட்டிகளை இழுத்துச் செல்லும் முறை இங்கிலாந்து நிலக்கரிச் சுரங்கங்களில் நடைமுறையில்

[தொடர்ச்சி பக்கம்—8]

சொன்னதும் சொல்லாததும்!

★

திருமலைக்கு திக்விஜயம் செய்திருந்தனர் இரு காங்கிரஸ்காரர்கள். இருவரும் மேலிடத்து அன்பைப் பெற்றவர்கள், உள்ளூர் கலவரங்களை அடக்கியதன் மூலம்!

ஆனுலும் அதில் ஒருவர் துடுக்குக்காரர். மனதில் பட்ட சில விஷயங்களை வெளியே பேசி விடுவார். அவர் வேறு யாருமில்லை, இப்போதைய முதலமைச்சரும் வருங்கால காங்கிரஸ் ராஷ்டிரபதியுமாகிய சஞ்சீவ ரெட்டியார்! இன்னெருவர் நமது காமராசர்!

இவ்விருவரும் இந்தியாவின் முதற் பணக்காரரான திருப்பதி வெங்கடேசுவரனை தரிசித்தபோது; பெரிய உண்டியலைக்காட்டி' இதில்தான்பணம்போடவேண்டுமா?" என்று காமராசர் கேட்டாராம்!

'ஆமாம்" என்ருராம் சஞ்சீவ ரெட்டி! இது சொன்னது!

" ஆமாம் நீங்கள் போடவில்லையா, ஏதாவது?"

" எப்படிங்க போடுவது? நானே குடும்பமில்லாதவன். அதோடு நம்ப 'பட்ஜெட்டும்' துண்டு விழுந்த பட்ஜெட்!" —இது அவர்கள் சொல்லாதது!

சாமியைக் கும்பிட்ட பிறகு காமராசரைப் பார்த்து அர்ச்சகர் "நன்ருக சேவித்தீர்களா?" என்று கேட்டாராம்.

"ஆகா... நன்ருக சேவித்தேன்!" என்ருராம். இது சொன்னது.

"இப்படித்தான் வடக்கை சேவித்தேன்; தொழுதேன்; பல்லாண்டு பாடினேன். என்ன பயன்? உதவி கேட்டு போனபோதெல்லாம் கரியைப் பூசியல்லவா அனுப்புகிருர்கள்?' அதோடு மட்டுமா? எதிர்த்துப் பேசிய சஞ்சீவ ரெட்டிக்கு ராஷ்டிரபதிப்பட்டம். ஆனல் எனக்கு...?'

—இது அவர் சொல்லாதது!

வெள்ளி 4—12—59 சென்னை

குற்றவாளிகள்

இந்திய உபகண்டத்தில் இன்றைய தினம் எது பெருகாவிட்டாலும், குற்றவாளிகளின் எண்ணிக்கை மட்டும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க அரசாங்கத்தினரும், காவல் துறையினரும் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளும், அதற்கெனச் செலவிடும் தொகையும் மிக அதிகமாகத்தான் காணப்படுகிறது.

1955-ம் ஆண்டில் இந்தியா முழுவதிலுமாக 5,35,000 குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதை வெளியிட்ட சர்க்கார் அறிக்கை 1956-ம் ஆண்டில் குற்றங்களின் எண்ணிக்கை 5,91,000 என்று அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கிறது!

ஆண்டிகளின் வேடத்தில் அகப்பட்டதைச் சுருட்டியவர்கள்—திருநீறு பூசி தெருவிலே விளையாடும் சிறுவர்களைக் கவர்ந்து சென்றவர்கள்—இத்தகைய குற்றவாளிகளும் அந்த எண்ணிக்கையில் சிக்கித்தான் இருக்கிறார்கள். வறுமையின் காரணமாக தெருவிலே இருக்கின்ற கடையிலிருந்து ரொட்டியைத் திருடிய சிறுவனும் குற்றவாளி; உல்லாச வாழ்வைக் கற்பனை செய்து கொண்டு ஊர் ஊராகக் கொள்ளையடித்துத் திரிகிறவனும் குற்றவாளி! பெற்றெடுத்த குழந்தை பசியெனக் கதறுவதுகண்டு— அதற்குப் புசியென எடுத்துத்தர எதுமற்ற காரணத்தால், அதை ஆற்றிலே தூக்கியெறிந்த தாய்மார்கள்; திரைமறைவிலே நடத்திய தீய நாடகத்தின் இறுதிக்கட்டமாக வயிற்றிலே உருவான கருவைச் சிதைக்கும் பெண்கள்— இப்படிப்பட்டவர்களும் அந்தப் பெரும் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

இதற்கான காரணங்களைக் கண்டறிந்து குற்றவாளிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்று அரசாங்கத்தினர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் தோற்றுத்தான் போயிருக்கின்றன. மது போதையால்--சுய நினைவுள்ள நிலையில் குற்றங்களுக்கு வித்தூன்றுகிறவர்கள் அதிகமாகின்றனர் என்பதை மதுவிலக்கை அமுலாக்குவதற்கான காரணங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், இன்று நாம் பார்க்கின்ற நிலை என்ன? கள்ளத்தனமாக மது காய்ச்சி குற்றவாளிகளானவர்கள் அதிகமாகப் பெருகிவிட்டனர்.

இப்படிக் குற்றவாளிகளின் தொகை அதிகரிப்பானேன்? காவல் துறையினருக்குச் சவால் விடுகின்ற முறையில் நாள்தோறும் கொலைகளும், கொள்ளைகளும் பெருகிக் கொண்டே போவானேன்?

—இந்த வினா எழும்பிய நேரத்தில்தான் கொள்ளையடிப்பதைக் தொழிலாகக் கொண்டவர்களும் வறுமை காரணமாக அந்தக் கொடிய செயலுக்குத் தாக்கப்பட்டவர்களும் மீண்டும் மீண்டும் அத்தகைய தவறான வழிகளில் நுழைகிறார்கள் என்ற உண்மை புலப்பட்டது. அதனால்தான் ஆண்டுக்கு ஆண்டு குற்றவாளிகளின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகிறது.

குற்றவாளிகளைத் தண்டிப்பது எதற்காக? தான் செய்தது தவறு என்று அவர்கள் உணர வேண்டும்; சிறை சென்றோ; அல்லது அபராதம் செலுத்தியோ குற்றத்திற்கான தண்டனையை அனுபவித்தவுடன் புது மனிதனாக உலவவேண்டும்--என்ற குறிக்கோளுடன்தான்! ஆனால் அப்படித் திருந்தியவர்கள் எத்தனை பேர் என்று பார்க்கிற நேரத்தில் வேதனை தருகின்ற உண்மைதான் பதிலாகக் கிடைக்கிறது.

ஒரு முறை கொள்ளையடித்தோ — கொலை செய்தோ சிறை சென்றவன் மறுபடியும் வெளியில் அதிக நாட்கள் நடமாடுவதில்லை. மிகக் குறுகிய கால இடைவெளிக்குப் பின் மீண்டும் 'உள்ளே' சென்றுவிடுகிறான். இத்தகைய நிரந்தரக் குற்றவாளிகள் -- தங்கள் வாழ்க்கையை அதற்கே அர்ப்பணித்து விட்டவர்கள்--மிகவும் அதிகமாகக் காணப்படுகிறார்கள் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அப்படியானால் சர்க்கார் செய்யவேண்டியது என்ன? குற்றவாளிகளை மேலும் மேலும் பிடித்துத் தண்டிப்பதில் காட்டுகிற ஆர்வத்தைப்போல், பன்மடங்கு அதிக கவனத்தை குற்றவாளிகளைத் திருத்துவதில் செலுத்த வேண்டும். தண்டனையால் திருந்தாதவர்கள் மிகச்சிலரே; சிறு குற்றத்திற்குத் தண்டனை அனுபவித்தவர்கள், குறுகிய காலத்தில் பெரிய குற்றங்களைச் செய்வதில் பின்வாங்குவது கிடையாது. ஆகவே, குற்றம் செய்பவர்களை வஞ்சம் தீர்க்கின்ற முறையில் தண்டித்து என்ன பலன்?

குற்றவாளி என்று ருசு செய்யப்படாத சந்தேகத்திற்குரியவர்களையே காவல் நிலையங்களில் சித்திரவதை செய்கிறார்கள்; பிணமாகவும் ஆக்கிவிடுகிறார்கள்! அது கண்டு வெகுண்டெழுந்த பொதுமக்கள் காவல் நிலையங்களைத் தாக்கி, கலவரங்கள் விளைவிக்கும் சம்பவங்கள் இப்போது மிகச்சாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டன. சந்தேகத்திற்குரியவர்களுக்கே இந்த நிலை என்றால், அவர்கள் குற்றவாளிகள் என்றாகி சிறைக்கும் சென்று விட்டால் கேட்க வேண்டுமோ? மிருகத்திலும் கேவலமாக அவர்களை நடத்துகிறது, சட்டம். உள்ளத்திலே ஒட்டிக் கொண்டிருக்கிற சிறிதளவு ஈரமும் வற்றிப்போய், அவர்கள் இரும்பு நெஞ்சர்களாக மாறி விடுகின்றனர். பிறகு வெளியே வருகிறபோது அவர்கள் எப்படித் திருந்தியவர்களாக இருக்க முடியும்?

ஆகவே காவல் துறையில் மனோதத்துவம் அறிந்தவர்கள் அதிகமாகப் பணியாற்ற வேண்டும். குற்றவாளிகளின் மனோ இயலைத் தெரிந்து, அதை நேரான வழியில் நடத்திச் செல்வதற்கான புதிய பல வழிகளைத் தேட வேண்டும். 'அன்பு' ஒன்றினால் எதையும் வசப்படுத்தி விட முடியும்; ஆகவே குற்றவாளிகளின் குரூரமான இதயங்களையும் தொட்டுத்தடவும் அன்பு உள்ளங்கள் சிறைகளில் நடமாட வேண்டும்.

மேலும் நல்ல பழக்க வழக்கங்களில்—உருவான காரியங்களில் அவர்களது கவனத்தை இழுத்துச் செல்லவேண்டும்! செயலற்ற முன் சீர்கெட்ட எண்ணங்கள் குலையத்தானே செய்யும்? சென்னைச் சிறைகளைப் பொறுத்தவரை இம்முயற்சியில் முன்னேற்றம் காணப்படவில்லை. கைதிகளின் உழைப்பைக் கொண்டு சில சிறைகளில் பால் பண்ணைகள், காய்கறி உற்பத்தி போன்ற சிறு தொழில்கள் நடைபெற்று வந்தன. அந்த முறையில் 1957-ம் ஆண்டு சென்னை மாநில சிறைகளில் உற்பத்தியான பண்டங்களின் மதிப்பு 23 இலட்ச ரூபாயாக இருந்தது. ஆனால் சென்ற ஆண்டு இந்தத் தொகையில் ஏறத்தாழ இரண்டு இலட்சங்கள் குறைந்து விட்டன! குற்றவாளிகள் பெருகியிருந்தும் அவர்களின் உழைப்பு குறைந்திருக்கிறது!

ஆகவே அரசினர் இவ்வழியில் தீவிரமான முயற்சிகள் எடுப்பது மிகவும் அவசியமாகும்! எவருமே பிறக்கும்போதே குற்றவாளிகளாகப் பிறப்பதில்லை. நல்ல மனிதர்கள்தான் குற்றவாளிகளாக மாறுகிறார்கள்; ஆகவே, அந்தக் குற்றவாளிகளை மீண்டும் மனிதர்களாக மாற்ற முடியும்! ஆனால் அதற்கிடையே நடைபெறுகிற போராட்டம் மிக மிகக் கடினமானதுதான்; எனினும் அது மிகவும் பாராட்டுக்குரியது; புதிய பரம்பரை ஒன்றையே தோற்றுவிக்கும் பெருமையைக் கொண்டது; மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு வழியமைப்பது!

நாடக அரசியல்

★

இது அரசியல் கூத்து. பிரதமர் வருகிறார். அவர் வருகை கண்டு மகிழ்வார்கள் மக்கள். மகிழ்வோடு தங்கள் குறையையும் கூறுவார்கள். கண்ணீர் வடிப்பார் அமைச்சர். நாங்கள் கவனித்துக் கொள்கிறோம் என வாக்குத் தருவார். இதயம் நிறைந்துபோய், ஏழை அவர் முகத்தை நன்றியுணர்ச்சியுடன் பார்ப்பான்.

அடுத்த காட்சி. பிரதமருக்கு அடுத்த அமைச்சர் வருவார். நம்பிக்கையால் மகிழ்வுற்றிருக்கும் ஏழை மகனைப் பார்த்து ஏளனச் சிரிப்பு சிரிப்பார். உன்குறை எப்போதுமிருக்கும் என்பார். வில்லன்போல் எக்காளச் சிரிப்பு சிரிப்பார். குடிமகன்முகம் குன்றிப் போகும்.

இதை நிரூபிக்க எத்தனையோ நிகழ்ச்சிகள் இருந்தாலும், அண்மையில் "ஆங்கிலம் இருக்கும்; பயங்கொள்ள வேண்டாம்!"—என நேரு அளித்த வாக்குறுதியும் அதை மறுதளித்து இந்திதான் ஆட்சிமொழி எத்தனை எதிர்ப்பு வந்தாலும் கால அட்டவணை இந்தியில் வரப்போகிறது என்ற கேஸ்கர் பேச்சும் நம் கவனத்திற்கு வருகின்றன.

★ பட்டினிப் பட்டாளத்தைப் பாலருந்தச் சொல்வதா?

★ பரத்தையர் வீட்டிலே வாலிபர் படையெடுப்பா?

பாரதத்தின் பண்பாடு பாரீர்; பாரீர்!

"நாய் வேஷம் போட்டால் குரைக்கத்தானே வேண்டும்?"—என்று ஒரு பழமொழி சொல்வார்கள்.

அதுபோலவே இந்திய உபகண்டத்து அரசியலில் இன்னொரு 'பழமொழி' தயாராவதற்கான வாய்ப்பும் ஏற்பட்டிருக்கிறது.

"உணவு மந்திரியாகி விட்டால் உளறித்தான் கொட்ட வேண்டும்!"

—இதுவரை உணவு அமைச்சர் பதவியை ஏற்றிருக்கும் எல்லா 'கனம்'களும் இந்தப் பழமொழி நூற்றுக்கு நூறு உண்மை என்பதைத்தான் நிரூபித்திருக்கிறார்கள்.

உணவு இல்லை—என்று இந்திய உபகண்டத்து மக்கள் கூக்குரலிட்டபோது, "அப்படிச்சொல்லாதீர்கள். பர்மாவிடம் பேரம் பேசி உணவு வரவழைக்கிறேன்; அமெரிக்காவோடு உடன்படிக்கை செய்தபின் உணவு கொண்டு வருகிறேன்"—என்று கூற வேண்டிய அப்போதைய கனம் முன்ஷி, புன்முறுவலோடு கூறினார், "உணவு கிடைக்கவில்லையென்றால் பருத்திக் கொட்டையைச் சாப்பிடுங்கள்"—என்று!

மூன்ஷி பெரிய அறிவாளி என்று பெயர் பெற்றவர். அதோடு சிறந்த வழக்கறிஞர் என்ற பட்டப் பெயரும் அவருக்கு உண்டு!

—இருந்தும், உணவு மந்திரி பீடத்திலே அமர்ந்ததும் அவர் பேசியதெல்லாம், ரொட்டி கிடைக்கவில்லையென்று மக்கள் அழுது புலம்பியபோது, "ஏன் அவர்கள் 'கேக்' சாப்பிடக் கூடாது?"—என்று கேட்ட முட்டாள் பிரெஞ்சு மகாராணியைத்தான் நினைவிற்குக் கொண்டு வந்தது!

அவருக்குப் பிறகும் அந்த பீடத்தின் 'மகிமை' மாறியிருப்பதாகத் தெரியவில்லை.

இப்போது இந்திய உபகண்டத்து உணவு அமைச்சராக இருக்கும் கனம் பட்டீல் சிறந்த நிர்வாகி என்று பெயர் எடுத்தவர்.

எதையும் திட்டமிட்டு ராஜதந்திரத்தோடு காரியமாற்றுவதில் வல்லவர் என்பதற்காகத்தான் முன்பு காங்கிரஸ் மேலிடம் கேரளத்திற்கு அனுப்பி காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அமைப்பை மேற்பார்வையிடச் செய்தது.

அப்படிப்பட்டவர் உணவு மந்திரி நாற்காலியில் அமர்ந்தது தான் தாமதம்; தனது முன்னோர்கள்போல் அவரும் உளறிக் கொட்டுவதற்கு ஆரம்பித்துவிட்டார்.

உணவு போதவில்லை—என்று மக்கள் முறையிடுகிறார்கள்; அழுது புலம்புகிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் அரசாங்கத்தின் அக்கறையைச் சொல்லி; உணவுப் பற்றாக்குறையை நீக்குவதற்காகத் தீட்டப்பட்டிருக்கும் திட்டங்களை எடுத்து விளக்க வேண்டிய உணவு அமைச்சர் என்ன பதில் தந்திருக்கிறார் தெரியுமா?

"உணவுப் பற்றாக்குறை ஒழிய வேண்டுமானால் இந்திய மக்கள் அனைவரும் அதிகமாகப் பால் சாப்பிடவேண்டும்!"

—கனம் பட்டீல் தந்திருக்கும் பதில் இது!

முன்பு முன்ஷியும் இப்படித்தான் பதில் கூறினார், "உணவு போதவில்லை என்றால் மரம் நடுங்கள். மரம் வளர்ந்து வானைத் தொட்ட பிறகு அதிலிருந்து புறப்படும் காற்று மேகத்தைக் குளிரவைத்து மழை பொழிவிக்கும்; பிறகு மழை வந்தால் விளைச்சல் வரும்" என்று! பட்டினியால் குடல் கருகிச் சாகிற நிலையில் இருக்கிறவனுக்கு இன்னும் பல ஆண்டுகள் கழித்து நடக்க இருக்கும் அழகான கற்பனையை வர்ணித்துக் காட்டினர்.

அதே ஆசனத்தில் அமர்ந்திருக்கும் பட்டீல் இப்போது மிக அழகாகக் கூறுகிறார். உணவுப் பற்றாக்குறையைப் போக்க பால் சாப்பிடுங்கள்—என்று!

பால்வாங்கிப் பருகும் நிலைக்கா பாமரனின் வாழ்க்கைத்தரத்தைக் காங்கிரஸ் அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது?

பிறந்த குழந்தைகளுக்கே தாய்ப்பால் தரமுடியாமல் கோடிக் கணக்கானவர்கள் குமுறுகின்ற நேரத்தில் இப்படியொரு அருமையான அறிவுரை தரும் அமைச்சர்பிரானை நாம் என்னவென்று அழைப்பது?

பதவியிலே அமர்ந்திருக்கும் பொறுப்பாளர்கள் பேசுகின்ற பேச்சா இது?

தூ, தூ! 'பாரதப் பண்பாடு'—என்று பண்டிதர் சென்றவிடமெல்லாம் பேசுகிறாரே, அந்தப் பண்பாட்டிற்கே பெருத்த அவமானம்!

✻

இதைவிடப் பெருத்த அவமானம் பாரதப் பண்பாட்டிற்கு ஏற்பட்டிருக்கிறதா—என்றால், இருக்கிறது என்று மார்தட்டிக் கூறும் நிலையில் இருக்கிறது அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி!

இளைஞர்களை எப்படியாவது இழுக்கவேண்டுமென்ற பேராசையில் நாக்பூர் காங்கிரஸ் ஒரு விசித்திரமான தீர்மானத்தைக் கொண்டு வந்தது.

"வாலிபத் திருவிழா"—எனும் பெயரில் இந்த நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு சகல வசதிகளோடு பிரயாணம்செய்வதற்கு ஏற்பாடு செய்துகொடுத்து அதன் மூலமாகவெல்லாம் கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் கட்சிக்கு வாலிபர்களைச் சேர்க்கிறார்கள்—என்று பொதுவாக ஒரு அபிப்பிராயம் நிலவி வருகிறது.

'அதை 'நாமும் செய்தால் என்ன?'—என்ற எண்ணம் காங்கிரஸ் கட்சியிலே சிலருக்கு ஏற்பட்டது.

அதன்படி சில வாலிபர்களைப் பொறுக்கி எடுத்து அவர்களைச் சகல வசதிகளோடும் வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் நடத்த அனுப்புவது — என்பதுதான் அந்தத் திட்டம்!

—இதற்குப் பெயர் 'சாகர் தர்சன்' என்பது!

இந்தத் திட்டத்தின் மூல வாசகம் எந்தவித அரசியல் வேறுபாட்டையும் கவனிக்காமல், நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் 500 வாலிபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டும்—என்றுதான் வற்புறுத்துகிறது.

ஆனால் இதில் எந்த வார்த்தையையும் அவர்கள் கடைப்பிடித்ததாகத் தெரியவில்லை.

மொத்தம் அனுப்பப்பட்டவர்கள் 429 பேர். அவர்களில் பெரும்பாலோர் பம்பாய், பஞ்சாப், டெல்லி—ஆகிய பிராந்தியங்களைச் சேர்ந்தவர்கள் தான்!

அதில் சென்றவர்கள் பலதிறப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அல்ல; நூற்றுக்கு நூறு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்! இது தனிப்பட்ட விஷயமாக இருந்தால் யாரும் இதை ஒரு பிரச்சினையாக எடுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள்.

'பாரதப் பண்பாட்'டின் தூதுவர்களாய்ப் புறப்பட்ட இவர்கள் தனிப்பட்ட முறையில் ஆளுக்கு ஐநூறு ரூபாய் கட்ட வேண்டும்.

—அந்தத் தொகைக்கு அதிகமாக செலவு ஏற்பட்டால், அப்படி ஆகும் அதிகச் செலவை அரசாங்கம் மான்யமாகத் தரும் 12,000 ரூபாயிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

[தொடர்ச்சி பக்கம்—10]

திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தினர் புதிய காங்கிரஸ் தலைவர் சஞ்சீவி ரெட்டிக்கு புலிக்குட்டி ஒன்றைப் பரிசாக வழங்கினார்களாம்!

கடல் கடக்கும் காட்டுமிராண்டிகள்! கண்ணீர் விடும் தாய்க்குலம்!

வேசைக்கு அன்பில்லை!

வெறியருக்கு முறையில்லை!

புல்லனுக்கு உள்ளமில்லை!

புலையருக்கு இரக்கமில்லை!

மன்னவனுக்கு நன்றியில்லை!

இதோடு இன்னொன்றும் சேர்த்துக்கொள்ளுங்கள், நெஞ்சிரக்கம் கொண்டு!

என்ன அது?

தென்னவனுக்கு வாழ்வில்லை!

இந்நாட்டின் பெருங்கதை அது. மேல் நாட்டினர் மெத்தப் பெருமைகொள்வார்கள் தங்கள் 'அழிந்துபட்ட கதைத் தலைவி' பற்றி! அவளுடைய அத்தனை பண்பும் இந்த நாட்டிற்கு உண்டு! உலகப் புகழாரம் அணிந்த கதைகளை, சோகக் கதைகளைப் படிப்போரே! எங்கும் திரியவேண்டாம்! எங்கள் பழந்தமிழ் நாட்டின் வரலாற்றைப் படியுங்கள். அது போதும்!

உங்கள் நெஞ்சாங் குழியிலே ஈரம் இருந்தால், கண்களின் இடுக்கிலே நீர் இருந்தால் கணடிப்பாகக் கண்ணீர் சொரிவீர்கள்! கொடுமையினும் கொடுமை! இந்த நாடு பட்ட அல்லல்களை நினைக்கும்போது கொதித்தெழுந்து நம் உதட்டிலிருந்து குதித்துவிடும் சொல்தான் கொடுமையினும் கொடுமை!

அந்தக் கொடுமை தீர்ந்ததா? நாடு இன்ப உறக்கம் சேர்ந்ததா?

நம்பிக்கை ஏதோ இருந்தாலும் நயவஞ்சகப் பனிப்படலம் இனியும் முடியவில்லை. ஏன்? எது தடுக்கிறது? தடுக்கும் படலம் எது?

டில்லி அடிமைத்தனம் இருக்கும்வரை பல்லி. பாப்பராண்டி வாழ்க்கை தீராது. அவர் ஆதிக்கம் இருக்கும்வரை நம்மைச் சோதிக்கும் வறுமையும் இருக்கும்.

பொருளின்மீது மாத்திரம் அவர்களின் ஏகாதிபத்ய நிழல் விழவில்லை! வரலாற்றின் புகழ் சொல்லும் கலையின்மீதும் அந்நிழல் படிந்திருக்கிறது! மூதாதையர் கதை பேசும் பண்பின்மீதும் அந்த ஆதிக்கப் பாம்புகள் படமெடுத்து அமர்ந்திருக்கின்றன. இலட்சியம் இது உனக்கு எனக் காட்டும் இலக்கிய வயலில்கூட அவர்களின் முள்மரம் தழைத்து விரிந்து கிடக்கிறது.

'வார்த்தை ஜாலம் ஆடுகிறாய் நீ! வடவரை நினைத்தவுடன் உன் வசவுக் கடல் மடைதிறந்துவிடுகிறது. நீ கூறுவது பொய்; புனைசுருட்டு'--எனக் கூறிக்கொண்டே, சீறிக்கொண்டே பாய்வர் 'ஏக இந்தியப் புலி'கள்!

அவர்களுக்குக் காணிக்கை இந்தஓரே ஒரு செய்தி. இதை எழுதியவர் ஒரு ரஷ்ய நாட்டுக்காரர். அவர் கூறுகிறார்: 'இந்தியாவின் தலைசிறந்த இதிகாசம், தொன்மைசால் இந்தியப் பண்பாட்டின் மாணிக்கக்கல்' — என! இப்படியெல்லாம் அடைமொழி கொடுத்துக் கூறும் பெருமைபெற்ற நூல் எது தெரியுமா?

மகாபாரதம்

இதுதான் தொன்மைசால் இந்தியப் பண்பாட்டின் மாணிக்கக் கல்லாம்! ஒரு பெண்ணை ஐவர் அனுபவித்ததும், தாய் தந்தைக்குப் பிறக்காதவர்களின் கதையையும் கூறுகிற இதிகாசத்தைப் பற்றித்தான் அப்படி அவர் வர்ணிக்கிறார்! வெட்கம்! வெட்கம்!

எப்படி இந்த ரஷ்யருக்கு தெரியும்? நம் டில்லி அரசினரின் அறிவிப்புகளைப் பார்த்துத்தான், பாவம், அவர் புகழ்கிறார். இங்கிருந்து ரஷ்யா செல்லும் அறிவிப்புகள், அங்கு செல்வோரின் இனம், அவர் கூறிடும் சேதிகள் அத்தனையும் இந்துஸ்தான் சமவெளியின் புகழை மட்டும்தான் பரப்புபவன!

பாரதம் மாத்திரம் ஏன், ஒல்டென் பர்க்காலும், ஷச்சர்பேப்ஸ்கியாலும், பரணிக்கோவாலும் மொழி பெயர்க்கப்படவேண்டும்? ரஷ்ய மக்களின் கவனத்தையெல்லாம் கவரும் வகையில் அது திணிக்கப்படவேண்டும்? 'இராமாயண'த்திற்கில்லாத 'மகத்துவம்' அதற்கேன் கொடுக்கப்படவேண்டும்?

இந்தப் 'புராண அரசியலிலும்' டில்லி தன் நயவஞ்சகத்தைப் புதைத்து வைத்திருக்கிறது. ஆம்; இராமாயணத்தைச் சொல்லிக் கொடுத்தால் ஒருவேளை. விஞ்ஞான அறிவு மிக்க ரஷ்யர்கள் திராவிட மக்களின் வரலாற்றையும், வாழ்வையும் 'குத்துமதிப்பாகப்' புரிந்துகொள்வார்களோ என்ற அச்சத்தால், பொறாமையால், ஆதிபத்ய எண்ணத்தால் வடநாட்டில் நிகழ்ந்த பாரதக் கதையை மட்டுமே அங்கு பரப்புகிறார்கள்.

இதற்கு டில்லி அரசும், அதன் உத்திரவை நிறைவேற்ற வேற்று நாடுகளுக்குச் செல்லும் வடமொழித் தமிழாசிரியர்களும் 'இந்தியப் பண்பாடு ஒன்றே!'— என்று தவறாது பிலாக்கணம் பாடுகிறார்கள்; வேற்று நாட்டவரை நம்ப வைக்கிறார்கள்.

முழுதும் வடவர் பண்பாட்டைப் பற்றிப் பண் பாடும் பாரதத்தை எப்படி மொழிபெயர்த்தார்களாம்? ஆங்கிலத்திலிருந்து ரஷ்ய மொழியிலா? இல்லை! இல்லையில்லை! அப்படிப் பெயர்த்தால் உயிர் இழந்து நின்றுவிடுமல்லவா அந்த (செத்த) மொழி? அதற்காக 'சமஸ்கிருத மூலத்தின் பாணியிலேயே அமையப்பெற்ற' வகையில் இயற்றப்பட்டதாம்!

அடுத்து, சாமான்ய—வெகுஜனங்கள் புரிந்துகொள்ளும் வகையில்—எளிய மொழியில் பாரதம் வெளியிடப்பட்டதாம். அதன் ஆசிரியர் ஜியார்ஜி இலின.

அந்தப் புத்தகத்தில் வியாச முனிவரின் படமும், பாண்டவர்கள். கௌரவர்கள், அவர்களின் மனைவிகளின் படமும் இணைக்கப்பட்டிருந்ததாம்! இதைத் தொடர்ந்து 'நள—தமயந்தி' கதையும் வெளியிடப்பட்டிருக்கிறதாம்.

'அடுக்காதீர்கள்; போதும்! எல்லாம் வடக்குத் திக்கின் புகழ் கூறும் சேதிகள்!'—இப்படிச் சீறலாம் நீங்கள்!

சீறிப் பாய்ந்தென்ன பலன்? செத்த மொழிக்கிருக்கும் விளம்பரம், ஐந்து இலக்கணங்கள் கொண்ட நம் தமிழுக்கில்லையே? இலக்கணத்திற்கு இன்று தோன்றிய ஆங்கிலத்தை நம்பியிருக்கும் இழிமொழிக்கு இருக்கும் வெளிநாட்டுப் புகழ், தொல்காப்பியம் தந்து தொலை கடலுக்கப்பாலும் தன் புகழ் வைத்த செந்தமிழுக்கு உண்டா? வடமொழிப் பாலை உண்டு வளர்ந்த பண்டிதரே வடமொழியின் சகோதரி எனப் பாராட்டிய தமிழின் ஒரு இலக்கியக் கதையாவது அந்த ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதுண்டா?

காட்டுமிராண்டிகளின் நாகரிகம் பேசும் இதிகாசக் கதைகள் எட்டுத் திக்கும் செல்கின்றன. நாகரிக முரசை முதன்முதலில் தட்டிய மொழியின் கதைகள் கடல் தாண்டாதது ஏன்? கேள்விகேட்டு விடுதலை வேட்கையை மேலும் உண்டாக்கிக் கொள்ள நினைக்கும் தமிழரே! ரஷ்யாவிலிருந்து இன்னும் ஒரு சேதி. கேட்டுக்கொள்வீர்!

'ஒரு குலத்திற்கு ஒரு நீதி கூறும் மனு நீதி'—என்று எள்ளி நகையாடுகிறீர்களே. அந்த மனு நீதியைப் புத்தக வடிவில் வெளியிடுவதற்கு 'பெருமுயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறதாம்!'

அப்படியா? மனு நீதியை மொழி பெயர்க்கிறார்களா? தமிழ் நாட்டைப்பற்றி ஒரு வார்த்தைகூட அந்த ரஷ்யரின் கட்டுரையில் இல்லையா?—

உண்டு! தமிழகத்தைப் பற்றி குறிப்பிட்டது உண்டு. என்ன குறிப்பிடுகிறார் தெரியுமா? 'சென்னையைச் சார்ந்த கோயில்களின் படங்களை' ரஷ்யர் பார்க்கிறார்களாம்!

கலை வளர்த்து, மொழிவளர்த்த தமிழகத்தைப் பற்றி அவர்கள் கோயில் படங்களிலிருந்து தெரிந்துகொள்ள விட்டிருக்கிறார்கள்! அனாதைப் பிள்ளைக்கு அளிக்கப்படும் மரியாதையைவிட கேவலமானதை தமிழ்மொழி வெளிநாடுகளில் அடைந்து வருகிறது.

இந்தியா, இந்தி மொழி, இவைகளைத் தந்த வடமொழி இவற்றின் பெருமைதான் பத்துத் திக்குகளிலும் ஊதப்படுகின்றது. முரசறையப்படுகின்றது.

என்னுடைய தமிழ் மொழி இந்த சாக்காட்டு மொழிகளைவிட உயர்ந்தது—என்று கூறும் நெஞ்சத் திறனுள்ள ஆசிரியர் வெளிநாடுகளில்லை. அனுப்பப்படும் போது அத்தகைய உணர்வு கொண்டோரை வடிகட்டிவிடுகின்றனர். இதற்கும் தப்பிக் கப்பலேறி தமிழின் புகழ் பரப்பச் சென்றவர்களை பேசவிடாமல் செய்கிறது. அரசு! மீறியும் பேசி தமிழ் மணக்கச் செய்பவர்கள், அடுத்த கப்பலிலேயே திருப்பி அனுப்பி விடுகின்றனர்.

இது தமிழின் நிலை; இழிநிலை! இதை மாற்றுவார் இல்லையா? தமிழ்த் தாயின் கன்னங்களில் உப்புக் கோடிடும் கண்ணீரைத் துடைத்துத் தேற்றுவார் இல்லையா? மொழிகள் குல முதல்வியை அவளுக்கு உரிய பீடத்தில் ஏற்றுவார் இல்லையா?

— அடியார்

பட்டுக்கு மயங்காத பத்தினிப் பெண்டிர் நாம்!

"நாங்கள் தனியாக இருந்ததைத்தான் கேட்கிறோம். மதுரைத் திருமலை நாயக்கர் கட்டிடத்தைக் கட்டியவர்கள் டெல்லிக்காரர்கள் அல்லர்! அகழிகளை வெட்டியவர்கள் அலகாபாத்காரர்கள் அல்லர்! நாம் கோட்டை கட்டி வாழ்ந்தவர்கள் என்பதற்கு வரலாறு இருக்கிறது. அப்படிப்பட்ட நாம் ஏன் டெல்லிக்கு அடங்கி இருக்கவேண்டும்?

"கோட்டை கொத்தளங்களைக்கட்டி வாழ்ந்த நாம்—தனிக் கொடி பறக்கவிட்ட நாம் ஈழத்துக்கும், சீனத்துக்கும் வாணிபம் செய்த நாம்—ஏன் ஒன்றாக இருக்கவேண்டும் என்று எந்த மந்திரியும் இதுவரையில் கேட்கவில்லை. எனவே நம்மை, 'பிரிவு மனப்பான்மை படைத்தவர்கள்' என்று வரலாறு புரியாதவர்கள்தான் சொல்லுகிறார்கள்.

"நாங்கள் இந்த நாட்டில் இருப்பதைத்தான் கேட்கிறோம்; இல்லாததைக் கேட்கவில்லை. இந்த நாட்டில் மல்லிகை இருக்கிறது; எனவே, வெள்ளைக்காரன், 'நம் நாட்டில் மல்லிகை இல்லை: ஆகவே நாம் தமிழகத்தோடு இணைந்து இருப்போம்' என்ற எண்ணவில்லை! நிலக்கரி இல்லாத நாடு நிலக்கரி கிடைக்கின்ற நாட்டோடு இணைந்து இருக்கவேண்டும் என்று எண்ணுவதில்லை! தங்கம் இல்லாத நாடு. 'தங்கம் கிடைக்கின்ற நாட்டோடு இணைந்து வாழவேண்டும் என்று விரும்புவதில்லை!

"எது கிடைக்கிறதோ அதைக்கொண்டு திருப்திப்படவேண்டுமே தவிர, 'அது இல்லை; இது இல்லை' என்று சொல்லுவது விடுதலைக் கோரிக்கைக்கு அழகல்ல! கட்டிய கணவனுடன் ஒற்றுமையாக வாழ்வதுதான் பத்தினிப் பெண்டிர்க்கு அழகு! பக்கத்துத் தெருவில் இருப்பவன் பட்டுப்புடவை வாங்கித்தருகிறான் என்பதற்காக 'அவன்தான் என் கணவன்' என்று கூறினால், அவளைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? அதைப்போலத்தான் நாட்டுப் பிரச்னையும்! உள்ளதைக்கொண்டு வாழ்வோம்; பத்தினிப் பெண்டிராகப் பெயரெடுப்போம்!"

— அறிஞர் அண்ணா

சென்ற இதழில்...

பெருந்தேவி வெளியேறிய செய்தியைக் கூறிட வேகமாக ஓடிவந்தான் குதிரைக் கொட்டடிக் காவலன். மாளிகைக் காவலருடன் அவன் மன்னன் படுத்திருக்கும் இடத்திற்குச் சென்றான். ஆனால் இருங்கோவேள் முத்துநகையை மீண்டும் ஒருமுறை பார்த்துவிட்டு வரலாம் என்ற ஆசை துளிர்த்தது. வீரபாண்டியாகப் போய் மேலும் அவளைக் குழப்பாமல், புதிய வேடத்தோடு இருங்கோவேள் மன்னனாகச் செல்வது என்று முடிவுசெய்து, புது மன்னன் வேடமணிந்து புறப்பட்டான்.

கண் மலரை மூடியிருந்த இமைகள், காலடிச் சத்தம் கேட்டு விலகின. 'யார்?' — என்று அதட்டலாகக் கேட்டாள். முத்துநகை 'மன்னன்!' என்று பதில் கூறினான். இருங்கோவேளின் இழிநிலையைத் தைரியமாக இடித்துக் காட்டினாள். பின்னர் அவள் எப்படிச் சிறைபடுத்தப்பட்டாள் — என்பதை விளக்கக் கோரினாள்.

மண்டபத்தில் அவள் மயங்கிக் கிடந்ததாகவும், அவளை எடுத்து வந்து ஆண் உடை நீக்கியபோது பெண் எனத் தெரிந்து கொண்டதாகவும், வீரபாண்டி மரண வாசலுக்கு அனுப்பப்பட்டதாகவும் கூறுகிறான் இருங்கோவேள்.

வீரபாண்டி மரணமடைந்து விட்டதாக அவன் கூறியதைக் கேட்டதும் முத்துநகை துடித்தாள்; கண்ணீர் வடித்தாள்!

'அழாதே கண்ணே!'—என்று தன்னை மறந்து அவளை இருங்கோவேள் தொட, அவள் புலியெனச் சீறி கன்னத்தில் அறைய, அவன் விளையாட்டுக்காக அவளைக் கட்டிப்பிடித்து அணைக்க, அவள் கட்டாரியைத் தூக்க, அதை மன்னன் லாவகமாகத் தட்டிவிட்டு மேலும் அணைக்கிறான்.

இத்தகு இக்கட்டான நேரத்தில் நுழைகிறாள் தாமரை. 'நிறுத்து, அண்ணா நிறுத்து!' என்று கூச்சலுடன! அண்ணனின் செயல் தவறு என்று இடித்துக் கூறுகிறாள். அதோடு பெருந்தேவி வெளியேறிய செய்தியைக் கூறுகிறாள். மன்னன் திடுக்கிடுகிறான்; அவ்விடத்தை விட்டு வேகமாக வெளியேறுகிறான்.

27. பூம்புகாரில் பெருந்தேவி

மரமாளிகையை விட்டுப் புறப்பட்ட பெருந்தேவி குதிரையை வேகமாக ஓட்டிக்கொண்டு கானகத்தின் பல பாதைகளில் ஆவேசமுடன் சென்று கொண்டிருந்தாள். கல்லும் முள்ளும் நிரம்பிய பாதை இருபுறமும் மரங்கள் நெருங்கி வளர்ந்து பாதை நடுவே வளைந்து கிடந்து குதிரையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டுமிருந்தன. அந்த அடர்த்தியான இருளின் பயங்கரமான மௌனத்தைக் கலைத்துக் கொண்டு கோட்டான்கள் ஓலமிட்டுக் கொண்டிருந்தன. கிளைகளில் அமர்ந்து குதிரையின் குளம்படிச் சப்தம் கேட்டுப் பறவைகள் சிறகையடித்துக் கொள்வதற்கும் பெருந்தேவியின் இதயம் படபடப்பதற்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை.

நெடுநாளையப் பிணியினால் பாதிக்கப்பட்டு உடல் மெலிந்து படுக்கையிலேயே கிடந்த அவளுக்கு எங்கிருந்து புதுப்பலம் வந்தது என்று அந்தக் குதிரை ஆச்சரியப்பட்டது போலும். அதனால் இடை இடையே வேகத்தைக் குறைத்துக்கொண்டு மெதுவாக நடக்க ஆரம்பித்தது.

அரசி விடுவதாயில்லை, குதிரையைத் துரிதமாகச் செலுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தாள். காரிருளில் ஓடிக்கொண்டிருந்த குதிரை திடீரெனக் கால் தவறி ஒரு சிறு குழியில் தவறி விழுந்து விட்டது.

நல்லவேளையாகப் பெருந்தேவி குதிரையிலேயே உட்கார்ந்து கொண்டிராமல் ஒரு மரக்கிளையைத் தாவிப் பிடித்துக் கொண்டு அதிலே தொங்கினாள்.

விழுந்த குதிரை மெதுவாக எழுந்து நின்றது. மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருந்த பெருந்தேவிக்குப் புதிய திகில் ஒன்று மின்னலெனக் கிளம்பியது. காரணம், அவள் பிடித்திருந்த கிளை, மெதுவாக அசைந்ததுதான்! கவனிக்க ஆரம்பித்தாள். மரக்கிளையின் சொர சொரப்பு கைகளுக்குத் தோன்றவில்லை. வழவழப்பான உணர்ச்சிதான் தோன்றியது. சந்தேகமில்லை; மலைப்பாம்புதான். அதைப் புரிந்து கொண்டதும் அரசி கீழே குதித்து விட்டாள்.

குதித்த வேகத்தில் குதிரையில் தாவி ஏறிக் கொண்டாள். தப்பித்தோம் பிழைத்தோம் என்று குதிரையை முடுக்கினாள். இரையை விழுங்கி விட்டுக்கிடந்த மலைப்பாம்பு மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது. பாம்பிடமிருந்து தப்பிய பிறகு, அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. தன்னையே நொந்து கொண்டாள். எதற்காகப் பாம்பிடமிருந்து ஓடி வர வேண்டும். அதற்கே இரையாகியிருக்கலாமே என்பதுதான் அந்த யோசனை. அவள் இப்படி நினைக்கும்போதே மனதுக்குள்ளிருந்து மற்றொரு பெருந்தேவி பேச ஆரம்பித்தாள்.

“பைத்தியக்கார ராணி! நீ எதற்காகப் புறப்பட்டிருக்கிறாய்? தற்கொலை செய்து கொள்வதற்கா? இலையடி இல்லை! உன் லட்சியத்தை மறந்து விடாதே! அதை நிறைவேற்றி விட்டுப் பிறகு செத்துப்போ! ம்...ஓடு! ஓடு!!”

“லட்சியத்தை என்னால் நிறைவேற்ற முடியுமா? எனக்கு அந்த வல்லமை இருக்கிறதா? என்ன இருந்தாலும் நான் பெண்தானே—”

“பிறகேன் வீட்டை விட்டுக் கிளம்பினாய்? இந்த யோசனை முன்பே இருந்திருக்க வேண்டும் உனக்கு. நீ இனிமேல் இருந்துதான் என்ன செய்யப் போகிறாய்? நீ இப்போது உயிரோடிருப்பதாகவா எண்ணிக் கொண்டிருக்கிறாய்? பேதாய்! நீ செத்து எத்தனையோ ஆண்டுகள் ஓடிவிட்டன. என்றைக்கு உன் மூச்சுப் பைகளில் நோய்க்கிருமிகள் குடியேறினவோ அன்றைக்கே உன் உயிர் அந்த இடத்தைவிட்டு வெளியேறி விட்டது. எந்த விதத்திலும் செத்துவிடக்கூடிய நிலையில் தள்ளாடிக் கொண்டிருக்கும் நீ, லட்சியத்தை நிறைவேற்றும் முயற்சியில் ஏன சாகக்கூடாது? தளராதே” தயங்காதே!! போ! போ!!

பெருந்தேவியின் உள்ளத்தில் பெரும் போராட்டம் எழுந்தது. என்றாலும், முன்னேறிச் சென்று கொண்டிருந்த அவள் பயணத்தில் எந்தவிதத் தயக்கமும் ஏற்படவில்லை.

தாமரையும் முத்துநகையும் முதன் முதலில் சந்தித்துப் பேசிய அருவிக்கரையின் பக்கம் வந்தாள். அந்த இடத்தைத் தாமரை பார்த்திருந்தால் எத்தனை எண்ணங்கள் படையெடுத்து அவளை அழவைக்குமோ யார் கண்டது?

அருவிக் கரையைத் தாண்டி அரசியின் குதிரை மரமடர்ந்த மற்றொரு பகுதிக்குள் நுழைந்தது. அந்தப் பகுதியிலேதான் இருங்கோவேளும் முத்துநகையும் ஒருநாள் சந்தித்துத் தங்கள் அன்பைப் பலப்படுத்திக் கொண்டார்கள். அந்த வழியே கணவனைத் தெய்வமென நம்பியிருக்கும் அரசி பெருந்தேவி சென்றாள்.

போகப் போக அரசிக்குக் களைப்பு அதிகமாயிற்று. மூச்சு வாங்க ஆரம்பித்தது. எங்கேயாவது சற்று இறங்கி இளைப்பாறிக்கொண்டால்தான் மேலே

அடுத்த இதழில்:

தளி ஈன்ற தளிர்!

மு. க. எழுதும் நீட்டோலை

தொடர்ந்து செல்லமுடியும் என உணர்ந்துகொண்டாள்.

அவளுடைய ஆருயிர்க் கணவனும் முத்துநகையும் தங்கள் காதலை மலர வைத்த பாழ் மண்டபத்தைக் கண்டாள். அந்த மண்டபத்துக்கு மட்டும் பேசும் சக்தியிருந்தால் இருங்கோவேள் முத்துநகை இருவரின் இன்பத் திருவிளையாடல்களைப் பற்றிப் பெருந்தேவியிடம் கோள் மூட்டியிருக்கும்.

அவள் குதிரையிலிருந்து மெல்ல இறங்கி மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டாள். இருமல் தொந்திரவு துவங்கிவிட்டது. அவளுக்கு உதவிசெய்ய அருகில் யாருமேயில்லை. இருமி இருமித் தொண்டையெல்லாம் வலியெடுத்து விட்டது. 'ஐயோ! அப்பா! அம்மா!' என்று வாய் விட்டு அலறினாள். விலாப்புறங்களில் சகிக்கமுடியாத வலி, முதுகெலும்பெல்லாம் முறித்துப் போட்டது போன்ற வேதனை. கண்களிலிருந்து மழையெனக் கொட்டியது வேதனையின் சின்னம்.

யாருடைய துணையுமின்றி அவளாகவே இருமிக் களைத்துப் போய்ச் சுருண்டு படுத்துக் கொண்டாள். தலைவரின் துணைவி படும் வேதனையைப் பார்த்துக்கொண்டே அந்தக் குதிரை அசைவற்று நின்றது.

அப்போது வெகுதூரத்தில் குதிரையொன்று வரும் குளம்படி ஓசை கேட்டது. அயர்வுடன் படுத்திருந்த பெருந்தேவி மெதுவாகக் கண்விழித்துக் குளம்பர ஓசை வரும் திக்கையே கவனித்துக்கொண்டிருந்தாள். ஆம்! குதிரைதான்—வரவர சப்தம் அருகாமையில் கேட்கிறது. தன்னைத்தான் தேடிக்கொண்டு வருகிறார்கள் என்று பயந்து போனாள். எழுந்து நடக்கமுடியாத அளவுக்கு உடல் நலிவு ஏற்பட்டிருந்தது. அதைப் பொருட்படுத்தாமல குதிரையில் தாவிக் ஏறிக்கொண்டாள் தன்னைத் தொடர்ந்து வரும் குதிரையிடம் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது என்று திடமாகத் தீர்மானித்துக் கொண்டாள். பலங்கொண்ட மட்டும் குதிரையைத் தட்டி ஓடச் செய்தாள். குதிரை அரசியின் குறிப்பை அறிந்துகொண்டு இருளைக் கிழித்தவாறு போய்க் கொண்டிருந்தது

அரசியின் குதிரை சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் மற்றொரு குதிரை மண்டபத்துப் பக்கம வந்து நின்றது. அதன்மீது இருங்கோவேள்தான் அமாந்திருந்தான். அவன் கையில் தீப்பந்தமொன்று இருந்தது. அந்த வெளிச்சத்தின் உதவியால் மண்டபத்துக்கருகே குதிரையொன்று நின்றிருந்த அடையாளத்தையும், அது புறப்பட்டுப்போன வழியையும் புரிந்துகொண்டான். அதைத் தவிர வேறு அடையாளம் ஒன்றும் கிடைக்கவில்லை, கீழேயிறங்கி மண்டபம் முழுதும் தேடிப் பார்த்தான். முத்துநகையைப் பயமுறுத்துவதற்காக எழுதப்பட்ட எழுத்துக்கள சுவற்றில் காட்சியளிப்பதை மட்டுமே கண்டான். ஒருக்கணம் முத்துநகையின் நினைவு தலைநீட்டியது. ஆனால் அரசியின் பிரிவு அவனை நிலை தடுமாறச் செய்திருந்த காரணத்தால் வேறு எதையும் அவனால் நினைக்க முடியவில்லை.

மீண்டும்! புரவியிலேறிக் கொண்டு தீப்பந்த வெளிச்சத்தின் உதவியால் முன்னே சென்ற குதிரையின் குளம்படிச் சுவடுகளைக் ... னித்தவாறு தொடர்ந்து சென்றான். அடர்ந்த காட்டுப் பகுதிகளைத் தாண்டி சிறிது ஒழுங்கான பாதைக்கு குதிரை வந்து சேர்ந்தது. தனக்கு முன்னே குதிரையொன்று போகும் சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து பிடித்து விடப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டான் இருங்கோவேள். இருளும் சிறிது சிறிதாக விலக ஆரம்பித்து விடியத் தொடங்கியது. வைகறைப் பொழுதில் அரசியின் குதிரையைப் பிடித்து விடக் கூடிய அளவு மிக அருகாமையில் இருங்கோவேளின் குதிரை வந்துவிட்டது.

முன்னே போவது அரசிதான் என்று அவனுக்கும் தெரிந்து விட்டது. தொடர்ந்து வருவது மன்னன்தான் என்று அவளுக்கும் விளங்கிவிட்டது. உயிரைக் கொடுத்தாகிலும் அவனிடமிருந்து தப்பிவிட வேண்டுமென்று அவள் முடிவு கட்டிக் கொண்டாள். அவனிடம் சிக்கிக் கொண்டால் தன் லட்சியம் நிறைவேறாது என்பது அவளுக்கிருந்த பயம்.

அந்தப் பயத்தில் அவள் ஓடும் போது பின்னாலிருந்து இருங்கோவேள், "பெருந்தேவி! நில்! நில்!!" என்று கூவிக்கொண்டே ஓடி வந்தான்.

அரசியும் பதிலுக்குக் கத்தினாள். "என்னைத் தடுக்காதீர்கள். என் லட்சியம் நிறைவேறும் போது தடங்கல் செய்யாதீர்கள்."

அப்படிப்பட்ட லட்சியந்தான் என்ன?

ஒரு பெண்ணுக்குத் தன் கணவனின் மகிழ்ச்சிதான் முதல் லட்சியம். அந்த லட்சியத்தை வெற்றிகரமாக ஆக்கவே அவள் புறப்பட்டிருக்கிறாள். அவள் கணவனுக்கு மகிழ்ச்சியேற்படக்கூடிய ஒரே ஒரு நிகழ்ச்சி கரிகால் மன்னர் பழிவாங்கப்படுவது தான்!

அந்தப் பழி தீர்க்கும் படலத்தை ஒழுங்காக நிறைவேற்றவே அவள் பெண்புலியென எழுந்து வருகின்றாள். அவள் நோக்கம் இன்னதென்று புரியாது இருங்கோவேளுக்கு! அப்படியே புரிந்தாலும் அந்தக் காரியத்துக்கு அவளை நிச்சயம் அனுப்பமாட்டான், எப்படியோ சிறு அலட்சியத்தால் அவள் அனைவரையும் ஏமாற்றிவிட்டு இவ்வளவு தூரம் வந்துவிட்டாள்.

அதோ.... பூம்புகார் நகரத்து நுழைவு வாயிலும் வந்துவிட்டது. அதில் நுழைந்துவிடுவதற்குள் அவளைத் தடுத்தாக வேண்டும். அதற்குமேல் அவளைப் பின் தொடர்ந்து சென்றால் தன்னை சோழநாட்டு காவலர்கள் சிறைப்படுத்தி விடுவார்கள். இருங்கோவேள் மன்னன் உயிரோடு அகப்பட்டுவிட்டால் அவர்களுக்கு ஒரே கொண்டாட்டம் தான! பூம்புகார் முழுதும் விழாக் கொண்டாடி மகிழ்வார்கள். இருங்கோவேள் அகப்பட்ட நாளை இந்திர விழாவாக ஆக்கிக் கொள்வார்கள். இறந்து போனாலும் போகலாமே தவிர சோழநாட்டு வீரர்களிடம் உயிரோடு அகப்படக் கூடாது.

இப்படியெல்லாம் எண்ணியவாறு அவன். அரசியின குதிரைக்கு மிக மிக அருகாமையில் வந்து அந்தக் குதிரையைத் தடுத்து நிறுத்த முனையும் சமயம் அவளுடைய குதிரை நகரின் நுழைவு வாயிலுக்குள் புகுந்து விட்டது. அதறகு மேல் செல்ல அவன் விரும்பவில்லை. அப்படியே சிலைபோல நின்றுவிட்டான். அதற்குள் பொழுதும் நன்றாக விடிய ஆரம்பித்துவிட்டது. இனி அங்கே நிற்பதும் ஆபத்து எனக் கருதி வந்த வழியே அவசரமாகத் திரும்பினான்.

பூம்புகாருக்குள் புகுந்த ராணி அநத அழகுத் திருநகரின எழில் நிறைவீதகளில் குதிரையில் போய்க் கொண்டிருந்தாள்.

சோழ நாட்டு மாதரசிகள் தங்கள் வீட்டு வாயில்களைச் சுத்தம் செய்து மூவேந்தரின் சின்னங்களான புலி, வில், கயல் ஆகியவற்றைக் கோலங்களாக்கிக் கொண்டிருந்தனர். உழவர் பெருமக்கள் தங்கள் தங்கள் செழித்துக் கொழுத்த எருதுகளை ஓட்டிக் கொண்டு கழனிப்பக்கம் போய்க் கொண்டிருந்தார்கள். துறைமுகத்தை நோக்கி மயில் தோகைகளைக் கட்டுக் கட்டாகக் குவித்த வண்டிகள் சென்ற காட்சி பெருந்தேவியினுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. மிளகு மூட்டைகளை உடல் வலுத்த பாட்டாளிகள் துறைமுகத்தின பக்கம் தூக்கிச் செல்வதையும் அவர்களின முகத்திலே காணப்பட்ட பூரிப்பையும் உற்சாகத்தையும் கண்டு பெருந்தேவி வியப்படைந்தாள்.

வீதிகளைக் கடந்து துறைமுகத்திற்கே குதிரை வந்து விட்டது. அடடா அந்தத் துறைமுகத்தில் அவள் கண்டு சுவைத்த காட்சிகள் தமிழகத்தின் பழம் பெருமையைப் பாடக்கூடிய காட்சிகளாகும். வெளி நாட்டிலிருந்து இறக்குமதியான வாட்டசாட்டமான குதிரைகள்! இங்கிருந்து ஏற்றுமதியாகும் மிளகு மூட்டைகள்! மயில் தோகைகள்! பாம்பின் தோல்! வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்! குடமலைப்பிறந்த ஆரமும் அகிலும்! தென்கடல் முத்து! இன்னோரன்ன பொருள்கள் குவிந்து கிடந்த காட்சி கண்டு அவள் நோயின் வேதனை கூட சற்று விலகியிருந்ததென்று கூறலாம். ரோமானியரும் கிரேக்கரும் துறைமுகத்தில் சுறுசுறுப்

[தொடர்ச்சி பக்கம்—12]



தினசரி காலண்டர் பெரிய அளவில் 3 பவுண்டு அட்டையுடன் ரூ. 1-8-0. மாத ஷீட் காலண்டர் பெரிய அளவில் ஒன்றரை பவுண்டு அட்டையுடன் அணா 0-8-0. கழிவு மொத்த வியாபாரிகளுக்கு 25 சதவீதம்; சில்லரை வியாபாரிகளுக்கு பனிரெண்டரை சதவீதம். வியாபாரிகள் கழிவு போக முன்பணம் அனுப்பி 10—12—59க்குள் பதிவு செய்து கொள்ளவும். மாவட்டத்திற்கு 1000 காலண்டர் வீதமே தயாராவதால் உடன் விண்ணப்பிக்க.

தயாரிப்பாளர்கள் :

சமரன் அண்டு கம்பெனி, சென்னை-1.

பதிவு செய்து கொள்ளவேண்டிய முகவரி :

130. தேவராஜமுதலி தெரு, பி. டி. சென்னை-3

தனி காலண்டர் வேண்டுவோர் உள்நாடு 2 ரூபாயும், வெளிநாடு 3 ரூபாயும் மணி ஆர்டர் அனுப்புக.

கலப்படம்

இதயமற்றவர் ஆட்சியில் எங்கும் எதிலும் கிராக்கி!

கிராக்கியாம்! இந்த வாரச் செய்திகள் பூராவும் இதே பேச்சைப் பேசிக் களிக்கின்றன. அவற்றில் சில வருமாறு:

காமராசரின் மாளிகையிலிருந்து ஒரு முக்கிய அறிக்கை வெளிவந்திருக்கிறது. 'இந்த சர்வ தட்சிகள் உணவுப்பொருள் விலை ஏறிவிட்டது, ஏறிவிட்டது—என்கின்றன. 'இது நாங்கள் சொல்வதில்லை; எங்கள் அரிசிப் பானை சொல்லும் கதை, பருப்புச் சட்டி கூறும் வரலாறு, எண்ணெய் டின் செப்பும் சேதி—என்கிறார்கள். எங்களுடையது மட்டுமல்ல; மந்திரி வீட்டு அரிசிப் பானையும், பருப்புச் சட்டியும், எண்ணெய் டின்னும்கூட அந்த விலையேற்றக்கதை கூறும்—என்று அழகாகக் கூறுகிறார்களே, அவர்களில் எப்படி விலையைக் குறைப்பது என்று கூறுவோர் இல்லையே! அப்படி வழி கூறும் எதிர்க்கட்சிகள் கிராக்கியாக இருக்கின்றதே!'

—இப்படி எழுத்துக்கு எழுத்து சோகமும் வினயமும் கலந்து பேசுகிறது, மந்திரி வீட்டிலிருந்து வரும் கற்பனை அறிக்கை.

❋

மந்திரிகள் எப்படிக் கூறினாலும் கிராக்கி நல்ல எதிர்க்கட்சிகளுக்கல்ல; உணவுப் பண்டங்களுக்கு என்பதை நர்டு உணர்ந்து வருகின்றது.

புளி விலையேறிற்று! மிளகாயும் ஏறிற்று! இப்போது கொத்தமல்லியும் விலையேறிவிட்டது. இந்த விலையேற்றத்தைத்தவிர்க்க வழி கேட்கிறார்கள், மந்திரிகள்!

'பதுக்கல்காரரைக் கண்டுபிடி! கண்டுபிடிப்பவருக்குத் துணை செய்! நியாயவிலைக் கடைகளில் நியாயம் நடக்க வழி செய்!'

—இத்தனை வழிகளைச் சொல்லுகிறது எதிர்க்கட்சிகள்! இதைக் கேட்கும் அமைச்சர்களில்லை! ஏன்? இப்போதிருப்பவர்களுக்குத்தான் வி(த)லை ஏற்றம் வந்துவிட்டதே,' பதவிப்பித்தால்!

❋

எங்கள் ஸ்தானிகாலயத்தில் கூட கிராக்கிதான்!—என்கிறார் சீனத்து ஸ்தானிகர்! என்ன கிராக்கி? துப்பாக்கி கிராக்கியா? —என்று நினைத்துவிடாதீர்கள். நல்ல நம்பிக்கையுள்ள ஆட்கள் கிராக்கியாக இருக்கிறதாம்!

காரணம், அண்மையில் ஒரு அசம்பாவிதம் சீன ஸ்தானிகாலயத்தில் நடந்து விட்டது. ஒரு சீனக்காரர் ஓடிவந்தாராம், அமெரிக்க ஸ்தானிகாலயத்திற்கு! 'ஐயா! ஐக்கிய அமெரிக்க நாட்டய்யா, சரணம்!'—என்று காலில் விழுந்தாராம். விழுந்தவரை வாரியணைத்து அடைக்கலம் கொடுத்ததாம், அமெரிக்க ஸ்தானிகாலயம். இது சம்மந்தப்பட்ட பூசலில் சீனக்காரர்கள் ஒரு அமெரிக்க சிப்பந்தியைக் கைப்பற்றி, கசக்கி, துன்புறுத்தினார்களாம்! இப்படி நாட்டுக்கு நாடு ஆட்களைப் பிடித்துத் துன்புறுத்திக்கொண்டிருக்கும்போது நம்பிக்கையுள்ள ஆட்களுக்குக் கிராக்கி இருப்பது நியாயம்தானே!

இதிலே இன்னொரு வேடிக்கை இந்தத் 'தகராறு' நடக்குமிடம் அமெரிக்காவோ, அல்லது சீனாவோ அல்ல! பஞ்சசீலம்—எனும் தர்ம சக்கரம் சுழலும் இந்தப் பாரத நாடுதான்.

❋

'கொலைகள் எங்கள் பக்கத்தில் அதிகம்!' என்று கூறிக்கொண்டால் 'எங்கள் பக்கத்தில் நல்லவர்களுக்குக் கிராக்கி! நாகரிகம் படைத்தவர்களுக்கு கிராக்கி!'—என்றுதான் அதற்குப் பொருள்.

உலகத்திலேயே இப்படி நல்லவர்களுக்கு அதிக கிராக்கியுள்ள இடம் அமெரிக்காதான்!

அங்கு கொலைகள் சர்வ சாதாரணம்! இந்த ஆண்டில் மாத்திரம் 15 லட்சம் கொலைகள் நடந்தனவாம்!

அது மணிக்கு ஒரு கொலை வீதம் ஆகிறதாம்! அது மட்டுமா?

ஏறத் தாழ 2-மணிக்கு ஒரு கார் திருட்டுப் போகிறதாம்!

இந்தச் செய்தியை வெளியிட்டது, ரஷ்ய நாட்டு 'டாஸ்' செய்தி நிறுவனம்!

❋

இதென்ன பிரமாதம்! இந்திய நாட்டில் இதைவிட அருமையான சேதியெல்லாம் இருக்கிறது. வேத முனிகளும், வியாசபகவான்களும், தர்ம புத்திரர்களும், தவ சிரேஷ்டர்களும் உலவிய இந்த நாட்டில் நேர்மையாளருக்கு கிராக்கி—என்பதை நாம் அறிவோம்!

நாம் அறிந்திருப்பதிலே ஆச்சரியமில்லை. வெளிநாட்டிலிருந்து வந்த ஒரு விருந்தினர் அறிந்திருக்கிறார்.

பாரத அரசினரின் அழைப்பின் பேரின் இந்தியா நோக்கிய எத்தியோப்பிய நாட்டு இளங்கோதான் அவர்!

அவர் தன் குழுவுடன் புனவைச் சுற்றிப் பார்க்க வந்திருந்தார். சுற்றிப் பார்த்துவிட்டு பம்பாய் திரும்பியிருக்கிறார்.

அங்கு சென்றதும் தம் நகைப் பெட்டி திருட்டுப்போய்விட்டதாக உணர்ந்து, அதிகாரிகளிடம் அறிவித்திருக்கிறார்.

ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள அந்த நகைப்பெட்டியைக் கண்டு பிடிக்குமாறு உத்திரவு அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

எங்கு? யாருக்கு?

இந்தியா முழுவதிலுமுள்ள போலீஸ்காரருக்கு நகைப்பெட்டியைத் தேடிக் கண்டுபிடிக்குமாறு உத்திரவு அனுப்பப்பட்டிருக்கிற தாம.

ஏன் இந்தியா முழுவதும் உத்திரவு அனுப்பப்படுகிறது? இது எதைக் காட்டுகிறது? நாட்டில் திருட்டுத்தனம் அவ்வளவு ஊடுருவியிருக்கிறது என்பதைக் காட்டுகிறது! இன்னும் நன்றாகச் சொன்னால், 'நாட்டில் நல்லவர்களுக்குக் கிராக்கி'—என்னும் கருத்து வேர்விட்டிருப்பதைக் காட்டுகிறது.

❋

'சண்டைக்குப் போகவேண்டும்; சீனக்காரன் மண்டையை உடைக்கவேண்டும்! எல்லையைக் காப்போம்; எம்புகழ் வளர்ப்போம்!'—என வீராப்புப் பேசும் மைனரிட்டி கட்சிகள்தான் நம் நாட்டில் அதிகம் என்று அங்கலாய்க்கிறார், அலகாபாத் பண்டிதர்! அதோடு, நாட்டில் முற்போக்காளருக்குக் கிராக்கி—என்று சொல்லாமற் சொல்கிறார்.

நாட்டுச் சண்டைக்குப் போகாமல் வீட்டுச் சண்டையைத் தீர்த்துக் கொள்வோர்தான் நாட்டிலே இன்றிருக்க வேண்டியவர்கள் என்கிறார்! அவருக்கு வேண்டிய கிராக்கியெல்லாம் சொன்னதைக் கேட்கும் தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகள்தான்!

❋

கல்லூரிகளிலும் கிராக்கியாம்! இட நெருக்கடி தானே என்று கேட்கத் தோன்றும், சாதாரண மக்களுக்கு! ஏனெனில் அவர்கள் தங்கள் பிள்ளைக்கு உறவினருக்கு இடம் தேடி அலைந்திருக்கிறார்கள்! ஆனால் கல்லூரி முதல்வர்கள் மாநாட்டில் கல்லூரிகளில் என்ன இல்லை என்பதை அறிவித்திருக்கிறார்கள். அமைச்சரும் அதற்காகப் பெரிதும் வருந்தியிருக்கிறார். ஆமாம். என்ன இல்லையென்றார்கள்? மாணவர்கள் இல்லையாம்! கல்லூரியில் படிப்பதற்கு மாணவர்கள் வரவே இல்லை! நடைமுறைக் கொவ்வாத கிராக்கி!

❋

இங்கே அரிசி விலை பருப்பு விலை ஏறி விட்டது—என்று நாம் வருத்தமெய்தும் இதே நாளில் பர்மாவிலோ கஞ்சாவுக்குக் கிராக்கி வந்துவிட்டதாம்! என்ன செய்தார்கள்? நம்மைப் போல் அவர்கள் கூட்டம்கூட்டி தீர்மானம் போடவில்லை! கொடிபிடித்து ஊர்வலம் நடத்தவில்லை. ரயிலைக் கவிழ்த்தார்கள், கலவரம் செய்தார்கள்; கொள்ளையடித்தார்கள்! இத்தனைக்கும் அவர்களுக்கு வேண்டியது, கஞ்சா! இதைக் கேட்டதும் நமக்குக்கூட 'பலாத்கார' எண்ணம் தலையெடுக்கும். இருந்தும் அது நம் வழியல்லவே!

⁂

மனிதனின் கதை...:

[2—ம் பக்கத் தொடர்ச்சி]

இருந்து வந்தது. அங்கு வேலை செய்தவர் ஒருவரின் மகனை ஜார்ஜ் ஸ்டீ:பென்சன் குதிரைகளுக்குப் பதிலாக வாட்டின் நீராவி யந்திரத்தைப் பொருத்தி வண்டிகளைத் தண்டவாளங்களில் ஓட விடுவதில் வெற்றி அடைந்தார்.

1815-ம் ஆண்டில் நிலக்கரிச் சுரங்கங்களில் நீராவியால் இயக்கப்பட்ட பெட்டிகள் ஓட ஆரம்பித்தன. நிலக்கரியைச் சுமந்து செல்லும் பெட்டிகள் பிரயாணிகளை ஏன் சுமந்து செல்லக்கூடாது என்ற கேள்வி பிறந்தது. ஸ்டாக்டன்—பார்லிங்டன் ஆகிய நகரங்களுக்கிடையே முதல் ரயில் சர்வீஸ் தொடங்கப்பட்டது. 1829-ல் லிவர்பூல்—மான்செஸ்டர் என்ற நகரங்களுக்கிடையே மிகப் பெரிய ரயில்வே சர்வீஸ் தொடங்கப்பட்டது. அதற்காக நடந்த போட்டியில் ஸ்டீ:பென்சனின் 'ராக்கெட்' என்ற நீராவி ரயில் யந்திரம் முதல் பரிசைப் பெற்றது. பத்தாண்டுகளுக்குள்ளாக இங்கிலாந்தில் மட்டும் இருநூற்றைம்பதுக்கு மேற்பட்ட ரயில்வே கம்பெனிகள் இருந்தன. நீராவியின் சக்தி கண்டுபிடிக்கப்பட்டு, ரயில்களும் நீராவிக் கப்பல்களும் நன்கு செயல்பட ஆரம்பிக்கவே தொழிற் புரட்சியின் தன்மை பூரணத்வம் அடைந்தது.

போக்குவரவு துரிதமாகவும் எளிமையாகவும் ஆகவே, ஆலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருட்கள் அதி விரைவில் கொண்டுவந்துசேர்க்கப்பட்டன.

நீராவியினுடைய சக்தியால் போருட்கள்—குறிப்பாகத் துணிகள்—ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டன. யந்திர யுகம் ஆரம்பமாயிற்று. ஆலை முதலாளிகள் பணத்தைக் குவித்தனர். குறிப்பிட்ட கூலி வாங்கிக் கொண்டு தொழிலாளர்கள் முதலாளிகள் செல்வம் பெற உழைத்தனர். பணக்காரர் மேலும் பணக்காரராகவும், ஏழை பரம ஏழையாகவும் மாறினர். இருப்பவர்—இல்லாதவருக்கிடையே பிளவு அதிகப்பட்டுக் கொண்டே போகலானது. பணம் படைத்த ஜாதி, ஏழை ஜாதி என்ற இரு புதிய பிரிவுகள் தொழிற் புரட்சியால் தோன்றின. சமூக வாழ்க்கையில் இதுவரையில் தோன்றாத புதிய சிக்கல்கள் முளைத்தன. பணம் புதிய அந்தஸ்துப் பெற்றது. பொருளியல், அரசியல் வாழ்வோடு பிரித்துணரா வகையில் பின்னிப் பிணைந்தது. செல்வம் பெருகியது; ஆனால் அதோடு பல பிரச்சினைகளும் தோன்றின.

இந்தப் புதிய நிலை குறித்துப் பல பெரியார்கள் தீவிரமாக சிந்திக்கத் தொடங்கினர் அவர்கள் கண்ட முடிவுகளை விஞ்ஞான அடிப்படையில் அமைத்துக் காட்டவும் முயன்றனர். அவர்களில் முதன்மையானவர்—கம்யூனிசத் தத்துவத்தின் பிதாவான கார்ல் மார்க்ஸ் என்பவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் மார்க்சைப்போல் வேறெந்த மனிதரும் மனித சிந்தனையில் அவ்வளவு அற்புத மாற்றத்தை ஏற்படுத்தியதில்லை. மார்க்ஸ் பற்றியும், அவருடைய கோட்பாடுகள் உலகில் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றியும் இனிவரும் கடிதங்களில் விரிவாக ஆராய்வேன்.

அன்புள்ள,

அகத்தியன்.

சுழல் விளக்கு

மாஜூமி

முனுசாமி; சென்னை—1.

(?) சர்க்கரைப் பஞ்சம் இப்போது எப்படி இருக்கிறது?

பஞ்சம் கடவுள் வரை போயிருக்கிறது! எழுமலையானுக்கு லட்டு செய்ய 'பூரா'...என்னும் சர்க்கரை கிடைக்கவில்லை! அதனால் வெல்லத்தில் லட்டு செய்து படைத்திருக்கிறார்களாம், பக்த கோடிகள்!

கிருட்டிணமூர்த்தி; பழனி.

(?) இந்திய மொழிகளை 'வெர்னகுலர்'—என்று அழைப்பதை நேரு கண்டித்தாரே ஏன்?

அடிமை மக்களின் மொழியைத்தான் வெள்ளையர் 'வெர்னகுலர்' என்பார்கள். அது கூடாது—என்கிறார் நேரு. ஆனால் தமிழை 'பிரதேச பாஷா' — என்று அழைப்பதை அவர் மனமார வரவேற்பார்!

அங்கப்பா; குடந்தை.

(?) சென்ற உலகப்போரில் சர்ச்சில் பேசியே புகழ்பெற்றதைப்போல சீன இந்தியத் தகராறில் நேரு புகழ் பெறுவாரா?

பெறுவார், அவருக்கு ஒத்துவராத வீரம் எனும் காரத்தைச் சேர்த்துக்கொள்ளத் துணிவிருந்தால்!

சோமசுந்தரம்; ராசபாளையம்.

(?) நம் நாட்டைப்போல சட்ட திட்டம் பலமாக உள்ள நாடு இல்லையாமே?

அப்படித்தான் கூறிக்கொள்கிறார்கள், ஆளவந்தாருக்கு வக்காலத்து வாங்குபவர்கள். ஆனால் வட நாட்டு நீதி மன்றம் ஒன்றில் பஸ்ஸில் டிக்கட் வாங்காது போவதைக் குற்றமாக்கும் சட்டம் எதுவும் இல்லையென்று எதிரியை விடுதலை செய்திருக்கிறார்களாம்! இப்படி இருக்கிறது இவர்கள் சட்டத்தின் லட்சணம்!

பி. மாணிக்கம்; கடலூர்.

(?) ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலுக்குள் தண்ணீர் புகுந்துவிட்டதாமே; சுவாமி மார்பளவிற்கு தண்ணீர் நிற்கிறதாமே?

தண்ணீர் நின்றால் அவருக்கென்ன? இலங்கையைத் தாண்டிய ராம தூதுவனுக்கு இது ஒரு பெரிய காரியமா? வீடிழந்து உறவிழந்து துன்பமுறும் 'ராம ராஜ்ய பிரஜை'களுக்குத்தானே அந்தக் கவலை?

(?) நினைத்தாலே சிரிப்பூட்டக்கூடிய சிறந்த நகைச்சுவை நடிகர் யார்?

காங்கிரஸ் தலைவர் ராஜாராம்.

ராகவன்; உறையூர்.

(?) தமிழ்நாடு தரும் சமீபத்திய செய்தி என்ன?

சூரிய வெளிச்ச அடுப்பு நமக்கேற்றது என்று நம்முடைய ஆட்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் மக்கள் தங்கள் விறகு அடுப்புக்கும் வேலையில்லை—என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பி. மலையான்; சென்னை—1.

(?) என்.ஜி. ரங்கா எப்போது ரங்காஜி ஆனார்?

இதற்கேன் ஆச்சரியப்படுகிறீர்கள்? இன்னும் கொஞ்சம் பொறுங்கள்; மசானிஜி, முன்ஷிஜி, ரெட்டியார்ஜி, மாரிசாமிஜி என வந்தாலும் வரும்!

நைனியப்பன், சேலம்.

(?) வரி இல்லாத தொழில் எது?

தொழில் எல்லாவற்றிற்கும் போட்டாகிவிட்டது. இப்போது தொழில் அல்லாதவற்றிற்கும் போட்டு வருகிறார்கள். திருமணத்திற்குகூட வரி போடலாம்—என்று ஒரு அதிகாரி கருத்துத் தெரிவித்திருக்கிறாராம்!

தணிகாசலம்; காரமடை.

(?) சப்தத்திலிருந்து மின்சார உற்பத்தி செய்கிறார்களாமே?

ஆமாம்! இந்தக் கண்டுபிடிப்பால் தமிழ்நாடு 'காங்கிரஸ் பிரச்சார பீரங்கி'களுக்கெல்லாம் நல்ல மதிப்பு வரப்போகிறது! அர்த்தமில்லாது அவர்களிடம் சப்தத்திலிருந்து.....அடடா......இந்தியத் துணைக் கண்டத்திற்குத் தேவையான மின்சாரத்தையே தயாரித்து விடலாமே?

சந்திரவரதன்; மைசூர்.

(?) நேருவின் பேச்சில் உங்களுக்கு மிகவும் பிடித்தமானது எது?

"நான் பதவி விலகினால் எனக்கும் இந்தியாவுக்கும் நல்லது" என்று அவர் பேசினாரே; அந்தப் பேச்சுதான்! இது நமக்கு மட்டுமல்ல; காங்கிரஸ் பெருந் தலைகளுக்கும் — ஆசனத்தில் அமர நேரம் பார்த்திருக்கும் 'தியாகி'களுக்கும் கூட மிகவும் பிடித்திருக்கத்தான் வேண்டும். இருந்தாலும் பண்டிதரால் என்ன முடியும்? இப்படி பேசத்தானே முடியும்? எப்போதுமே செயலை எதிர்பார்க்கக்கூடாதே!

சிவசாமி, காங்கயம்.

(?) சோட்டா நாகப்பூர் என்பது என்ன?

'சோட்டா சோஷலிசம்' பேசும் டாட்டா பிர்லாக்களின் தொழிற்சாலைகள் பரவியிருக்கும் பிடபூமியின் பெயர் சோட்டா நாகப்பூர்!

பரசுராமன், நாகர்கோவில்.

(?) இன்று சொல்லிச் சலித்த சொல் எது?

சோஷலிசம்!

பி. கே. கருணாகரமூர்த்தி; ஜெயங்கொண்ட சோழபுரம்.

(?) 'நான் ஒரு நாடோடி'—என்று இந்தியப் பத்திரிகையாளர் விருந்தில் பண்டித நேரு சொல்லியிருக்கிறாராமே; அந்தப் பெயர் அவருக்குப் பொருந்துமா?

அவர் நாட்டை ஆளுகின்ற முறையில் அந்தப் பட்டத்தை அவர் யாருக்குமே இரவல் கூடத் தரமாட்டாரே! நாடோடிக்குப் பல இடங்களைச் சுற்றுவதில்தான் ஆசை; நம் நாட்டு அமைச்சர்களுக்கே அதுதான் வேலை என்றால், இந்தியப் பிரதமரைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? அத்துடன் கால்போன போக்கில் நடக்கும் நாடோடி சுற்றுப்புறத்தைப் பற்றி கவலையே படமாட்டான்; உள் நாட்டைப் பொறுத்தவரை என்ன நடக்கிறது என்று நேரு கவலைப்பட்டதில்லையே!

கற்பகமணி, வாலாஜாபாத்.

(?) தலாய்லாமா சென்னை வருகிறாராமே?

அந்தக் 'கடவுள்' இந்தியா வந்தார். கூடவே சீனப் பீரங்கி வந்துவிட்டது! இப்போது சென்னை வருகிறார் அவர்! இனி என்ன வருமோ...?

மி. குப்புசாமி; பெரியகுளம்.

(?) சுதந்திரக் கட்சியின் முதல் உறுப்பினர் யார்?

திருப்பதி வெங்கடேசுவரப் பெருமாள்தான்! ஏனெனில் தனி நபர் சுதந்திரம் இருந்தால்தானே இந்த மாதத்தைப் போல் ரூ. 2,96,634 இந்திய நாணயங்களும், ரூ. 115 ஐதராபாத் நாணயங்களும், 236 தோலா எடைத் தங்கமும், 3,139 தோலா எடை வெள்ளியும் கிடைக்கும்?

அ. ராசன்; பொன்மலை.

(?) சஞ்சீவ ரெட்டி ராஷ்டிரபதி பதவி ஏற்பதில்கூட எதிர்ப்பிருந்ததாமே?

என்ன இருந்தாலும், அவர் தெற்கே பிறந்தவரல்லவா?

தாஸ்; கோவை.

(?) சுப்பிரமணியம் சுதந்திரக் கட்சியில் இருந்தால்...?

கவலைப்படாதீர்கள், பதவியிழந்த கட்சியில் அவர் எப்போதும் சேரமாட்டார்.

வேலுசாமி, மேட்டுப்பாளையம்.

(?) ஆவடி சோஷலிசத்திற்கும் நாகபுரி சோஷலிசத்திற்கும் இடையில் என்ன நடந்தது?

ஒரு பாரம் குறைந்தது, காங்கிரசிற்கு, ராஜாஜி இறங்கியதால்!

அனிபா, குடந்தை.

(?) பசி வந்தால் என்ன ஆகும்?

பசி வந்தால், மானம், குலம், கல்வி, வன்மை, அறிவு, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, காதல்—ஆகிய இந்தப் பத்தோடு, பாரத புத்திரர்கள் ஆட்சியில் உயிரும் பறக்கும்!

அருள்தாசன்; திருப்பத்தூர்.

(?) தி. மு. க. -வின் உயிர் நாடிகள் எவை?

பொருளைத் துரும்பென நினைக்கும் தியாகிகள்; பகையைத் துரும்பென நினைக்கும் வீரர்கள் — ஆகியோர்தான் தி. மு. க. வின் உயிர் நாடிகள்!

கே. தங்கவேல்; சாத்தூர்.

(?) நேரு எத்தனை பேர்?

நேரு இருவர் என்கிறார் சிலர்; மூவர் என்கிறார் பலர்; ஆனால் அவர் நிமிடத்திற்கு ஒருவர்!

சோமசுந்தரம்; ராசபாளையம்.

(?) குடும்பத்தின் அரசியாம் பெண்ணுக்கு சிம்மாசனம் கணவனின் மடி என்றால் அவள் மடி யாருக்கு சிம்மாசனம்...?

குழந்தைக்கு — என்கிறான் ஒரு கவிஞன்.

அங்கப்பன்; திண்டிவனம்.

(?) அரசாங்க ஊழியருக்கு அரசாங்கம் புதிதாக ஏதாவது தருகிறதா?

ஆம்; எச்சரிக்கை தருகிறது. பெண்டு பிள்ளைகளைப் தள்ளி வைத்தால் தண்டனை கொடுப்போம்—என்று!

ப. மணியம்; ஈரோடு.

(?) வையகத்திலே பயன்படாதவை எவையெவை?

குருவில்லாத வித்தை, அறிவில்லாத வாணிபம், குணமில்லாத மனைவி, நீதி இல்லாத அரசு, தீபம் இல்லாத மனை, பசி இல்லாத உண்டி, உண்மையில்லாத வசனம், 'யோசனை இல்லாத மந்திரி' என்கிறான் பழங்காலப் புலவன் ஒருவன். ஃ

பண்டிதரின் பதட்டம், படிப்படியாக!

கொரியா: 'நல்லது...' | ஹங்கேரி: 'ஓஹோ...' | பெர்லின்: 'உம்..ம்..' | திபேத்: 'ஆ?' | லாவோஸ்: 'ஹீ?' | இந்தியா: 'ஊ ஊ ஊ!!'

கம்யூனிஸ்ட்டு நாடுகளின் ஆதிக்கச் செயல் ஒவ்வொன்றும் பண்டிதரின் தோற்றத்தில் ஏற்படுத்திய மாற்றத்தை ஒரு டச்சுப் பத்திரிகை இவ்விதம் சித்தரிக்கிறது.

★ வரிக்கு அலைகின்ற சர்க்கார் முகத்தில்
கரி பூசுகின்ற கனவான்கள் பலர்!

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

—இங்கே ஏழைகளின் வரிப் பணத்திலிருந்து ரூபாய் 12,000 மான்யம் 'சாகர் தர்சன'த்திற்குச் செல்வதால்தான் 'இது நியாயமா?' என்கிற கேள்வியை வரி கொடுக்கிறவர்கள் சார்பில் நாம் கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இப்படி ஒருவித அநியாய அடிப்படையில் புறப்பட்ட 'சாகர் தர்சன்' இலங்கை, பர்மா, மலாயா, சிங்கப்பூர், இந்தோனேஷியா முதலிய நாடுகளைச் சுற்றிவிட்டுத் திரும்பியிருக்கிறது.

இந்த 'சாகர் தர்சன்' வெளிநாடுகளிலே எவ்வளவு உயரத்திற்கு 'பாரதத்தின் பெருமை'யை உயர்த்தியிருக்கிறது — என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமா?

இதோ அந்த விபரம்: இந்த 'சாகர் தர்சன்' குழுவினரைக் கௌரவிப்பதற்காக வெளிநாட்டு மாந்தர் நடத்திய எந்தவொரு கூட்டத்திலும் மொத்தம் 429 பேரில் குறைந்தது 25—க்கு அதிகமானவர்கள் கலந்துகொண்டதே கிடையாது!

அப்படியானால் மீதமிருக்கும் அத்தனை பேரும் எங்கே போனார்கள்—என்று கேட்கிறீர்களா?

இதோ. உதாரணத்திற்கு ஒன்று—

அந்தக் குழுவைச் சேர்ந்தவர்களுள் மூன்று பேர் சிங்கப்பூரில் உள்ள ஒரு விபச்சார விடுதியில் வம்பு செய்ததற்காக போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்!

சுமார் பதினெட்டு மணி நேரம் காவலில் இருந்த பிறகு அங்குள்ள இந்தியத் தூதுவராலயத்தின் தலையிட்டால் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

—இப்படியெல்லாம் அலைகடல் தாண்டி 'பாரதப் பண்பாட்டை' நிலை நிறுத்திய இவர்களைப் பற்றி இன்னுமொரு சுவையான தகவல் இருக்கிறது.

ஒவ்வொருவரும் சட்டப்படி ரூபாய் 75—க்குச் சமமான வெளிநாட்டுச் செலாவணிதான் கைவசம் வைத்திருக்கலாம்.

ஆனால் அந்தக் கோஷ்டியினர் பம்பாய் திரும்பிய பிறகு அவர்கள் கொண்டுவந்த பொருட்கள் மீது சுங்கவரி செலுத்தியதின் மூலம் அரசாங்கம் வசூல் செய்த தொகை எவ்வளவு தெரியுமா?

1,22,000 ரூபாய்கள்!

இவ்வளவு பெரிய தொகையை அவர்கள் சுங்க வரியாகச் செலுத்தியிருக்கிறார்கள் என்றால் அவர்கள் இன்னும் எத்தனை லட்ச ரூபாய்க்குப் பொருட்கள் வாங்கிக்கொண்டு வந்திருக்க வேண்டும்?

ஒரு நபர் 75 ரூபாய் மதிப்பளவுதான் சட்டப்படி வெளிநாட்டுச் செலாவணி வைத்துக்கொள்ள முடியுமென்றால், அவர்களுக்கு இவ்வளவு பெரிய தொகை எந்த ரூபத்தில் கிடைத்தது?

அவர்களைக் கேட்டால், 'அந்தப் பொருட்களையெல்லாம் வெளிநாட்டில் உள்ள எங்கள் உறவினர்கள் அன்பளிப்பாகக் கொடுத்தது'—என்று ஒரே வரியில் பதில் சொல்கிறார்கள்.

—இந்த வழக்கமான பதிலை அரசாங்கம் நம்பிக்கொண்டிருக்கிறதா?

இதில் வேடிக்கை என்னவென்றால் அந்தக் கோஷ்டியைச் சேர்ந்த ஒரு நபர், தான் வாங்கி வந்த பொருட்களுக்காக 1,275 ரூபாய் சுங்க வரி செலுத்தியிருக்கிறார். அதோடு அவர் சிங்கப்பூரிலிருந்து தட்டெழுத்துப் பொறியொன்றும் கொண்டுவந்திருக்கிறார். அதற்கு அவர் சுங்க வரி செலுத்தவில்லை!

ஏனென்றால் அந்தத் தட்டெழுத்துப் பொறி அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியினால் தனக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டது என்று கூறுகிறார்.

ஆனால் நவம்பர் 6–ம் தேதி வரை அந்தத் தட்டெழுத்துப் பொறி அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்குத் திருப்பித் தரப்படவில்லை என்று கூறுகிறது, பம்பாயிலிருந்து வெளிவரும் 'கரண்ட்' ஏடு!

—இதுதான் இந்த நாட்டில் காங்கிரஸ் பாடுபட்டு வளர்த்து வரும் 'பாரதப் பண்பாடு'! இந்தப் பண்பாட்டைத்தான் 'சாகர் தர்சன்' என்ற தூது கோஷ்டியினர் இலங்கை, பர்மா, மலாயா, சிங்கப்பூர், இந்தோனேஷியா— போன்ற நாடுகளிலே பரப்பி விட்டு வந்திருக்கின்றனர்.

❋

இப்படி வெளிநாடுகளில் சுற்றிவிட்டுத் திரும்புகிறவர்களிடம் வரி வசூலிப்பதில் கண்களை அகலத் திறந்து காத்திருக்கிற அரசினர் உள்நாட்டில் வரி வசூலிக்கும் 'இலட்சணம்' குறித்து இப்போது சோகச்செய்தி ஒன்று கிடைக்கிறது.

கேட்டவர்களை விலா நோகச் சிரிக்க வைக்கும் 'பாரதப் பண்பாடு', இந்த நாட்டுப் பஞ்சை பராரிகளின் எலும்புக்கூடுகளின் மேல் நடந்து—அவர்களது மரண மூச்சைப் பின்னணி ஒலியாகக்கொண்டு—பணப்பெட்டிகளிடம் தஞ்சமடைகின்ற கொடுமையை எப்படித்தான் விவரிப்பது?

ஏழை பங்காளர்கள் நாங்களே என்று 'சோஷலிச மாதிரி' பேசுபவர்களின் முகத்திலே கரி பூசப்படுகின்ற நிகழ்ச்சிகள் பெருகிக்கொண்டுதான் இருக்கின்றன.

பணம் படைத்த சீமான்கள், இந்திய அரசைத் தங்கள் காலடியில் போட்டு மிதித்து நசுக்கிக் கொண்டிருக்கிறார்கள். இல்லாவிடில் வரி வசூலிக்கும் 'ஆயிரக் கணக்கான' அதிகாரிகளின் பார்வையிலிருந்து தப்பி வாழ்ந்துகொண்டிருக்க முடியும்?

இந்த நாட்டில் சர்க்காரால் விதிக்கப்படுகின்ற பல்வேறு வகையான வரிகளை வசூலிப்பதில் நிறைய ஓட்டைகள் இருக்கின்றன. அந்த ஓட்டைகளின் வழியாக இன்றுவரை 'மாய'மாய் மறைந்துபோன தொகை ரூ. 200 கோடி!

ஆமாம்; 200 கோடி ரூபாய்தான் வசூலிக்கப்படாமல் விடப்பட்டுவிட்டது! ஆனால், இன்று ஒருவர்கூட அத்தகைய வரி கொடுக்காது ஏமாற்றிய குற்றத்திற்காகத் தண்டிக்கப்படவில்லை!

—பாராளுமன்ற உறுப்பினர் மகாவீர் தியாகியைத் தலைவராகக் கொண்ட விசாரணைக் கமிட்டி ஒன்று இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கிறது.

"வரி கொடாமல் ஏய்க்கப்பட்ட தொகையில் 150 சத விகிதம் வீதம் அபராதம் விதிக்க சட்டத்தில் விதியிருக்கிறது. வரி கொடாமல் திரிகின்ற பெரும் முதலாளிகளின் மீது இந்த விதி உபயோகிப்படாதது மிகவும் விசித்திரமே!

"பிரிட்டனில் ஒவ்வொரு ஆண்டும் வரிகொடாத பெரும் முதலாளிகள் சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். அவர்களுக்கு உடந்தையாக இருக்கும் 'அடிட்டர்'களும் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறார்கள்; இதே நிலை அமெரிக்காவிலும் காணப்படுகிறது!"

—இப்படி நீளுகிறது அந்த அறிக்கை.

மேற்கண்ட நாடுகளுடன் தலை நிமிர்ந்து நிற்கும் தகுதியைப் பெற்றுவிட்டதாகச் சொல்லப்படும் இந்திய சர்க்கார் உள்நாட்டில் வளர்க்கும் 'பண்பாடு'களில் இதுவும் ஒன்றா?

பசியென்று துடிக்கும் பஞ்சையைப் பார்த்து பாலைப் புசியென்று சொல்லும் அறிவுரையும், பரத்தையர் வீட்டிலே தங்கும் பெருந்தன்மையும், பணத்திற்கு மண்டியிடும் ஈனத்தனமும்தான் 'பண்பாடு' என்றால் அந்தப் பண்பாடு அழியட்டுமே; யாருக்கு வேண்டும்? ∴

தயாராகிறது!

புத்தம் புது முறையில்–தமிழ்ப் புவனம் வியக்கும் வகையில்

பொங்கல் வாழ்த்துக்கள்

கிடைக்குமிடம்: முத்துவேல் பதிப்பகம்
77, மதுரை ரோடு, ○ திருச்சி-8.

நூலேணி

அணுச்சக்தியின் எதிர்காலம்

எட்வர்ட் டேல்லர்
ஆல்பர்ட்· லேட்டர்

இந்த உலகம் அணுக்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. இது தெரியாத மக்கள் எத்தனையோ பேர். அத்தனை பேருக்கும் புரியும் வண்ணம் இந்நூல் அணுவைப் பற்றி விளக்குகிறது. நல்ல நடை, எளிதான விளக்கம் உள்ள நூல்.

அணுவின் பாகங்களிலிருந்து அதனுள்ளிருக்கும் உட்கரு, அதில் நடக்கும் அதிசய வேலைகள், அணுவைப் பிளக்கும் செயல் பற்றிய விளக்கம், கதிர் இயக்கம், அதனால் வரும் கேடுகள் இவைகள் பற்றி மிக விரிவாகப் பேசுகிறது நூல்.

அழகான அட்டையும், கண்கவரும் பதிப்பும், விளக்கமிகமான பக்கங்களும் கொண்ட இப்புத்தகம் விஞ்ஞானத்தைத் தமிழில் படிக்க விரும்புவோர் படிக்கும் தரத்தில் இருக்கிறது.

[கிடைக்குமிடம்: இந்தியா புக் அவுஸ், 193, மவுண்ட் ரோடு, சென்னை—2. பக்கங்கள் 284. விலை ரூ. 1.]

★

திறந்த வாயில்

ஹெலன் கெல்லர்

"எழுபதாண்டுகளுக்கு மேலாகியும், கண், காது, வாய் ஆகிய உறுப்புகளின் நலன் இழந்திருந்தாலும், உலகப் பெருந்தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருப்பவர் இந்நூலாசிரியர். சந்திப்போரின் கன்னங்களைத் தடவி கைகளை நெருடி அவர்தம் எண்ணப் போக்கினை அறிந்து கொள்ளும் ஒரு தனி ஆற்றல் பெற்றதால் இந்த அம்மையார் உலகத்தின் பார்வைக்குள்ளானார். அத்தகையவரின் கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள், திறந்த வாயில் என்ற தலைப்பில். அக்கருத்துக்களில் பல பகுத்தறிவிற்கு உள்ளடங்கா திருப்பதும் கண்கூடு. தமிழ் மொழியாக்கத்தில் பொருளற்ற முறையில் அமைந்த சொல்லாட்சியையும், வடமொழி வாடையையும் தவிர்த்திருக்கலாம். அழகான அமைப்பு கொண்ட புத்தகம்.

[கிடைக்குமிடம்: இந்தியா புக் அவுஸ், 193, மவுண்ட்ரோடு, சென்னை 2. பக்கங்கள் 144. விலை. ரூ. 0—50.]

★

பைசுவனின் காதலி

இரா. தியாகிதி

போர் வெறிகொண்ட மன்னனையும், அன்பறம் போதிக்கும் அடிகளாரையும் இன்ன பிறரையும் சுற்றிச் சுழன்றோடும் இந்நாடகம் முதல் முயற்சி, கன்னி முயற்சி என்பதைப் பறை சாற்றுகிறது. நீண்ட சொற்றொடர்கள் நாடகத்தின் வேகத்தைத் குறைக்கின்றன. அந்தக் குறை தவிர்க்கப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். நல்ல தமிழுக்காக இதன் ஆசிரியர் பாராட்டப்படும் தகுதி பெறுகிறார்.

[கிடைக்குமிடம்: மூவேந்தர் பதிப்பகம், காரைக்குடி. பக்கங்கள்: 100. விலை ரூ. 1–00.]

★

நாடகக் கலை வளர நாம் செய்யவேண்டியது என்ன?

சில மாதங்களுக்கு முன்பு லண்டன்மா நகரத்தில் உள்ள டிரூரி லேன் தியேட்டரில், "பை பேர் லேடி" என்னும் அமெரிக்க நாடகம் நடக்க இருப்பதாகத் தினத்தாள்களிலே செய்தி வந்தது.

அந்தச் செய்தியோடு வெளி வந்த முதல் பத்திரிகையைப் பார்த்த மாத்திரத்திலேயே மக்கள் வெள்ளம் தியேட்டருக்குப் படையெடுத்தது போல் இருந்தது அதன்பிறகு வெளியான செய்திகள்!

ஆம்: நாடகம் அரங்கேற்றுவதற்கு சரியாக ஏழு மாதங்களுக்கு முன்னதாக பொதுமக்கள் டிக்கெட்டுகளை வாங்க ஆரம்பித்து விட்டார்களாம்!

அதாவது நாடகத்தின் முதல் ஒத்திகை ஆரம்பிப்பதற்கு முன்பே, பல மாதங்களுக்குத் தியேட்டரில் 'அவுஸ் புல்' போர்டு தொங்க ஆரம்பித்து விட்டதாம்!

இத்தனைக்கும் டிரூரி லேன் தியேட்டர் இங்கிலாந்தின் இரண்டாவது பெரிய தியேட்டர்! ஒரே சமயத்தில் அங்கே 2,247 பேர் அமர்ந்து நாடகத்தை ரசிக்கலாம்!

—இப்போது கணக்கிட்டுக் கொள்ளுங்கள், அந்த நாடகத்திற்கு மக்கள் மன்றத்திலே எத்தகைய செல்வாக்கு என்று!

நாடகத்தின் பெருமை இவ்வளவோடு முடிந்ததா? இல்லை.

பல மாதங்களுக்கு முன்பே சிரமப்பட்டு 'கியூ'வில் நின்று டிக்கெட் வாங்காதவர்கள், நாடகத்தைக்கண்டு களிக்க இன்னும் எத்தனை மாதங்கள் காத்திருக்க வேண்டுமோ என்கிற நிலைமை ஏற்பட்ட பிறகு, தின ஏடுகளிலே பல விசித்திரமான விளம்பரங்கள் வர ஆரம்பித்தன.

"முதல் நாள் நாடகத்துக்கான இரண்டு டிக்கெட்டுகள் அவசியம் தேவைப்படுகின்றன. அதற்குண்டான விலையை விட போதிய அளவு 'பிரீமியம்' (அதிகப் பணம்) தரப்படும்."

—ஆர்வமிக்கவர்கள் இப்படியெல்லாம் விளம்பரம் செய்திருக்கிறார்கள்!

★

"எங்களுக்கு முன் வரிசையில் இரண்டு இடம் இருக்கிறது; பின் வரிசை 22-ல் இரண்டு டிக்கெட் வைத்திருப்பவர்கள் முன் வந்தால் மாற்றிக் கொள்ளலாம்."

—சேர்ந்து உட்கார விரும்புபவர்கள் தந்த விளம்பரம் இது!

"முன் வரிசையில் இரு டிக்கட்டுகள் கைவசம்! அதிகப் பணம் தருகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்!"

—இது வியாபாரிகள் தந்திருக்கும் விளம்பரம்!

இப்படி யெல்லாம் அந்த நாடகத்தின் அரங்கேற்றம் லண்டன் மா நகரத்தின் மகத்தான நிகழ்ச்சிகளுள் ஒன்றாகத் திகழ்ந்திருக்கிறது!

ஏன்?

நாடகம் அங்கே கலாச்சாரத்தின் ஒரு அங்கமாகத் திகழ்கிறது!

அங்கெல்லாம் முகத்திலே பவுடர் பூசிக் கொள்வது ஈனத்தனமானது என்று நினைப்பவர்கள் தான் ஈனர்களாகக் கருதப்படுகிறார்கள்.

இல்லையென்றால் பிரிட்டனின் பிரதமராக இருந்தவரும், ஆங்கில மொழியில் சொற்பெருக்காற்றுவதில் ஈடுஇணையற்றவர் என்று கருதப்படுபவரும், ஆங்கிலத்தை அழகு நடையில் எழுதியதற்காக நோபல் பரிசு பெற்றவருமான வின்ஸ்டன் சர்ச்சிலின் மகள் சாரா சர்ச்சில், இன்னும் நாடகத்தில் நடித்துக் கலைத் தொண்டாற்றுவதைத் தொழிலாகக் கொண்டிருப்பாரா?

அதுபோலவே, உலகப் பேரறிஞரும், முதன் முதலாக நாடகத்தைக் கொள்கை விளக்கத்திற்கான கருவியாக்கி, குவலயப் புகழ்பெற்ற பெர்னட்ஷாவின் சகோதரி லூசி ஷா, ஒரு நாடக நடிகையாகத் திகழ்ந்தாரென்றால் அது அந்த நாட்டு சமுதாயம் நாடகத்தை அற்பத் தொழிலாகக் கருதவில்லை — என்பதற்குத் தானே சான்றிதழ் தருகிறது?

ஆனால் இந்த நாட்டில்தான் அதற்கு மாறான நிலை பரவியிருப்பதைக் காண்கிறோம்.

முகத்திலே 'பவுடர்' தடவி விட்டால் அவர்கள் ஏதோ தீண்டத்தகாதவர்களாக நினைக்கப்பட்டார்கள்.

—அறிஞர் அண்ணா அவர்களது சகாப்தத்தில், அவரே நாடகம் எழுதி, தானும் நடித்து, தனது தம்பிமார்களையும் அப்படிச் செய்ய வைத்து; இப்படிப்பட்ட தவறான எண்ணத்தை மாற்றிவிட்டாலும் கூட இன்னும் நாடகக் கலை தகுந்த அடிப்படையில் புதுப்பிக்கப்படவில்லை.

தினந்தினம் கலை விருந்து அளித்த நாடகக் கம்பெனிகள் பல, 'கடை விரித்தோம்; கொள்வாரில்லை, சுருட்டிக் கொண்டோம்!'—என்ற தோல்வி முகாரியோடு மூடப்பட்டுவிட்டன.

இதற்குக் காரணம் வெள்ளிடைமலை.

சினிமாவின் போட்டிக்கு ஈடு கொடுக்க முடியாத நாடகத்திற்கு அவ்வளவாக மக்கள் மன்றத்தில் செல்வாக்கு இல்லை.

மேலை நாடுகளில் சினிமாவுக்குக் கதை வசனம் எழுதுபவர்களைவிட, சினிமாவில் நடிப்பவர்களைவிட, சினிமாவை டைரக்ட் செய்பவர்களைவிட சிறந்த நாடகத்தை எழுதுபவர்களுக்கும், அதில் நடிப்பவர்களுக்கும், அதை டைரக்ட் செய்பவர்களுக்கும்தான் பொதுமக்கள் அதிக மதிப்புத் தருகின்றனர்.

நல்ல சினிமாவைவிட நல்ல நாடகத்திற்குத்தான் அங்கே அதிக வசூலாகிறது என்கிற இன்னொரு உண்மையையும் நாம் மறந்துவிடக்கூடாது.

"நீ எங்கே புறப்படுகிறாய்?" —என்று ஒரு ஆங்கிலேயனோ அமெரிக்கனோ இன்னொருவனைப் பார்த்துக்கேட்க, அவன் சினிமாவுக்குப் போவதாகச் சொன்னால் "த்சு! சினிமாவுக்கா?"—என்று தான் இன்னொருவன் உதட்டைப் பிதுக்கியவாறு மறுமொழி தருகிறான்.

காரணம் சினிமா பலதரப்பட்டவர்களைக் கவருவதற்காகத் தயாரிக்கப்படும் 'வியாபாரப் பொருளாகவும்' நாடகம் கலைப் படைப்பாகவும், நாடகம் பார்ப்பது தான் கலையார்வத்தைக் காட்டுவதாகவும் அங்கு மதிக்கப்படுகிறது.

சினிமாவின் தாய், நாடகம்; அவர்கள் தாய்க்கு உரிய மதிப்பைத் தருவதற்குத் தயங்குவதில்லை; நாம்தான் மறந்துவிட்டோம்!

அதுமட்டுமல்ல; உலகத்தில் வேறு எந்த மொழியும் நம் தமிழ் மொழிபோல் 'இயல், இசை, நாடகம்'—என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படவில்லை.

ஆனால் நம் முத்தமிழ் மொழியில்தான் மூன்றாவது தமிழான நாடகத் தமிழ் அழிந்து வருகிறது.

அந்த அழிவைத் தடுத்து நிறுத்தாவிட்டால், நாடகத்தமிழுக்குப் புத்துயிர் அளிக்காவிட்டால், தமிழை 'முத்தமிழ்' என்று கூறுவதற்குப் பொருள் இல்லாமல் போய்விடும்.

அதற்கு அடிப்படையான முதல் தேவை நாடகத்தின் பெருமையை மக்கள்மன்றம் உணர்ந்து போற்றுவதற்கு முன்வர வேண்டும். பொதுமக்களிடையே இந்த 'ருசி'யும் ஆதரவும் தோன்றிவிட்டால் பிறகு தானாக நாட்டில்நல்ல நாடகங்கள் நூற்றுக்கணக்கில் மலர்ந்துவிடும்.

அரங்கண்ணலின் இரண்டு படங்கள்!

இம்மாதம் தமிழகத் திரையுலகில் பவனி வரப்போகின்ற படங்களின் வரிசையில் சகோதரர் இராம. அரங்கண்ணல் திரைக் கதை வசனம் எழுதியிருக்கும் இரண்டு படங்கள் நல்லிடம் பெற்றிருக்கின்றன.

முதலாவதாக, இம்மாதம் 11—ம் தேதியன்று, ஓரியண்டல் மூவி சார் தயாரித்திருக்கின்ற "பொன் விளையும் பூமி" வெளிவருகிறது. "திராவிட நாடு" இதழின் வாயிலாக அரங்கண்ணலின் நல்ல தமிழைப் படித்துக் களித்தவர்கள், முதன் முறையாக திரையின் மூலம் கேட்டு மகிழும் வாய்ப்பை மேற்கண்ட படம் ஏற்படுத்தியிருக்கிறது. கிராமச் சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருக்கும் கதை —முன்னணி நட்சத்திரங்களின் சேர்க்கை—இவைகளை எல்லாம் பார்க்கிற நேரத்தில் அது ஒரு வெற்றிப் படமாகும் என்பது உறுதி. முற்றிலும் முடிவடைந்து விட்ட அந்தப் படத்தை பிரபல டைரக்டரான ஏ. பீம்சிங் டைரக்ட் செய்திருக்கிறார். ஜெமினி கணேசன், பத்மினி, ராகினி, கே. ஏ. தங்கவேலு, சந்திரபாபு, டி. எஸ். பாலையா—ஆகியோர் நடித்திருக்கின்றனர்.

அடுத்தபடியாக வெளிவரயிருப்பது "தாய் மகளுக்குக் கட்டிய தாலி". விபத்துக்குப் பின்னால்—நீண்ட இடைவெளிக்குப் பிறகு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் தோன்றப் போகும் படம் இது. செல்வச் சுரங்கத்திலே பிறந்து-சீர்திருத்த ஆர்வம் கொண்டு — சாதி வெறியைத் தொலைக்கப் பாடுபடுகிறான் 'சுந்தரம் என்ற வாலிபன். அறிஞர் அண்ணா அவர்கள் படைத்த அந்த இளைஞனின் பாத்திரத்தைப் புரட்சி நடிகர் ஏற்று நடித்திருக்கிறார்.

மற்றும், அவருடன் ஜமுனா, எம். என். ராஜம், ராஜசுலோசனா, கண்ணாம்பா, கே. ஏ. தங்கவேலு, எம். ஜி. சக்கரபாணி, ஓ. ஏ. கே. தேவர் — ஆகியோர் நடித்திருக்கின்றனர்.

படத்தின் தயாரிப்பாளரும், கல்பனா கலா மந்திர் அதிபருமான நண்பர் ஆர். ஆர். சந்திரனே இப்படத்தை டைரக்ட் செய்திருக்கிறார்.

இப்படம் இம்மாதம் 25—ம் தேதியன்று திரையிடப்பட இருக்கிறது!

வசனம் வேண்டுமா?

வசனமில்லாத படங்கள் முன்பு தமிழகத்தில் வந்ததுண்டு: ஊமைப்படம் என்ற பெயரில்! பின்னர் ஒரே சங்கீதமயமாய், வசனத்திற்கு சிறிதும் மதிப்பில்லாமல் இருந்தது. பின்னர் அறிவியக்க வாதிகளின் பிரவேசத்தால் வசனத்திற்கு மதிப்பேற்று. வசனம வளம் பெற்றது. வசனமில்லாத படம் என்றாலே வியப்பிற்குரியதாய் மாறியிருக்கிறது. நம் வியப்புக்குரிய சேதி வெளிவந்திருக்கிறது: செக்கோஸ்லாவியாவின் படம் ஒன்றிலுள்ள வசனம் ஏறத்தாழ 20 வார்த்தைகள் தானும். அந்தப் படத்தின் பெயர் 'வெண்புறா!'

• 'முரசொலி' மாறன் திரைக் கதை வசனம் எழுதியிருக்கும் "குமார ராஜா" வில் பாலையா இசை மழை பொழிகிறார். முதன் முறையாக சந்திரபாபு குணச்சித்திர பாத்திரம் ஏற்று நடிக்கின்ற இப்படத்தை சிவகாமி பிக்சர்சார், தயாரித்து வருகின்றனர். டைரக்ட் செய்பவர் பிரபல ஒளிப்பதிவாளரான ஜி. கே. ராமு அவர்கள்.

முகப்பில்...

நகரத் தந்தை அப்துல் காதரும் துணைத் தலைவர் தேவராசனும்!

புகைப்படம்: சாமுவேல்

தலைநகர்...

[முதல் பக்கத் தொடர்ச்சி]

பணம் படைத்தோருக்கே சொந்தம் — கனதனவான்களின் பட்டுடை தரித்த உடலுக்கு ஏற்ற ஆசனம்—மாற்றார் அமர்ந்தால் இந்த மண்டிலமே பொடிப் பொடியாகும்—என்கிற பாணியில் நம்மை அழுத்திக்கொண்டிருந்த இரும்புப் பெட்டிகள், இருந்த இடம் தெரியவில்லை; நல்லிதயமுடையோர் — தொண்டு செய்யும் குறிக்கோள் கொண்ட தூய்மையாளர்கள்தான் தேவை எங்களுக்கு—என்ற மக்கள் குரல் இன்று பெருமதிப்பைப் பெற்று விட்டது!

அப்துல் காதர் இளைஞர்; இருபத்து எட்டே வயது நிரம்பப் பெற்ற காளை; எனினும் வயது முதிர்ந்தோர் வாழ்த்த—வயிற்றிலே தீயைச் சுமந்திருப்போர் தனி இடத்தில் அமர்ந்து தலைகவிழ்த்து அலற—தன் கடமை செய்யப் புறப்பட்டு விட்டார்!

சென்னையின் பாதி வீடுகள் அவருடையவை; நகரைச் சுற்றி ஓடுகின்ற பஸ்களில் பல அவருடைய பாட்டன் பூட்டன் காலத்தவை; ஏழடுக்கு மாளிகையின் உச்சியில் நின்றுதான் இந்த எழில்மிகு நகரைப் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டவர்; எப்பாடுபட்டேனும் இப்பதவியைப் பெற்றுவிட வேண்டும் என்பதற்காக லட்சம் லட்சமாக வாரி இறைத்தார் — இப்படி எவரும் காதரைப்பற்றி பேசிடமுடியாது!

காசை நீரென மதித்துச் செலவிடும் கனவான் என்று அவரை அழைக்க மாட்டார்கள்; காசைத் தூசென மதித்துச் செயலாற்றும் வீரர் என்று பாராட்டுவார்கள்!

அவர் சென்னை பல்கலைக் கழகத்தில் ரசாயனப் பிரிவு பட்டம் பெற்றார் என்றாலும், மக்கள் மன்றம் என்ற பல்கலைக் கழகத்தில் 'ஏழை பங்காளர்' 'துன்பம் கண்டு துவளாத தொண்டர்' — என்ற பட்டங்களைப் பெற்றவர்! அவரது கடந்துபோன நாட்களின் வாழ்க்கைச் சம்பவங்கள் அந்த உண்மையைத்தான் எடுத்துக் காட்டுகின்றன!

முந்தைய தேர்தலில் நகர மன்ற உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டுத் தோற்றவர், அவர். அப்போதெல்லாம் அறிவியக்கத்தின்பால் அவர் கொண்டிருந்த ஆர்வம் அவரைப் பெற்றவர்களிடத்திலேயே 'பயனற்றவர்' என்ற பட்டத்தைத் தேடித் தந்தது!

பொதுப் பணியின் துவக்கத்திலே வழக்கம்போல் எழும்புகின்ற இந்தப் போராட்டத்தைக் கண்டு அவர் தளர்ந்துவிடவில்லை. அவதூறும், ஆபத்து கலந்த முகஸ்துதியும், முதுகுப் புறமிருந்து தாக்கும் முறை கெட்ட செயலும்தான் பொது வாழ்வுப் பாதையில் அன்றாட நிகழ்ச்சிகளாயிற்றே! அத்தனைக்கும் பதில் சொல்லி — இத்தரையில் யான் செய்யும் பணி சிறந்தது என்று உழைத்தார்; பண்டிதருக்கு எதிராகக் கருப்புக்கொடி பிடித்து விடுவாரோ — என்ற பயத்தால சென்னை அரசு முன்கூட்டியே கைது செய்து சிறையிலே தள்ளுமளவுக்கு அவர் உழைத்தார்.

அந்த உழைப்பிற்குப் பரிசுதான் இன்று அவருக்குக் கிடைத்திருக்கிறது!

மகனின் நடத்தையிலே மாசுண்டோ என்று பயந்த பெற்றவர்கள், இன்று தன் செல்வன் நகரத்தில் முதல் மகனாக மாறிவிட்டது கண்டு பெருமிதம் அடைகிறார்கள்!

அதிலும் அவர், காங்கிரஸ் நண்பர்கள் தனக்கு எதிராகத் திரைமறைவில் நடத்திய தில்லுமல்லுகளையும் எதிர்த்து வெற்றி வாகை சூடியிருக்கிறார்!

சென்னை நகர மன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர் தி. மு. கழகத்தினரே! அப்படி அதிக எண்ணிக்கை உடையவர்கள் அரியணை ஏறுவதுதான் நேர்மை வழி! ஜனநாயகம் என்பது என்னவென்று தெரியாத குழந்தைகளும், கண்ணற்ற குருடர்களும்கூட இந்த உண்மையை ஒப்புக்கொள்வார்கள். ஆனால் முகத்திரண்டு புண் பெற்ற காங்கிரசார் மட்டும் அதை அனுமதிக்க மறுத்து, போர்க்கோலம் பூண்டனர்; தலைமைப் பதவிக்குப் போட்டியிட முன்வந்தனர். உள்ளபடியே ஜனநாயகத்தில் பற்றும் பாசமும் இருக்குமேயானால், இந்த விபரீத முயற்சியில் அவர்கள் ஈடுபடவே மாட்டார்கள்!

குறைந்த எண்ணிக்கை உறுப்பினர்களைக் கொண்டவர்கள் ஏன் போட்டியிடவேண்டும்? தேர்தலில் தங்களையே எதிர்த்து நின்று வெற்றிபெற்ற சுயேச்சைகளின் தயவை நாடலாம் என்ற துணிவாக இருக்கலாம். அப்படி சுயேச்சைகள் ஆதரவு தந்தாலுங்கூட பெரும்பானமை பலம் அவர்களுக்குக் கிடைத்திட வாய்ப்பே இல்லை!

இருந்தும் போட்டியிடத் துணிந்தார்கள் என்றால், அதற்குக் காரணம் வேறு கட்சி ஓட்டுகளை விலைக்கு வாங்கிவிடலாம் என்ற நச்சுக் கருத்தின் அடிப்படையில்தான்!

இந்தத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற்றிருந்தால், அந்த வெற்றிக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் ஊழலை — மக்கள் உணர்ந்து கொள்ளாமலா போய்விடுவார்கள்?

பதவி மேல் கொண்ட வெறியின் காரணமாக இப்படிப் பண்பாட்டைக் கொன்று போடுகிறவர்களுக்கு மன்ற உறுப்பினர்கள் சரியானதொரு பாடத்தைப் போதித்துவிட்டார்கள்; முகத்திலே கரியைப் பூசி மூலைக்கு அனுப்பி விட்டார்கள்!

எப்படியும் நகரத்தின் அடுத்த தலைவர் தி. மு. க.வினராக இருக்கக்கூடாது என்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட சதிகள் அனைத்தையும் முறியடித்து வெற்றி வாகை சூடியிருக்கிறார், அப்துல்காதர்!

அதைப் போலவே தோழர் தேவராசன் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்!

உழைத்து உழைத்து உரமேறிய அவரது உடலும், களைப்புக்கிடையேயும் தோன்றித் தோன்றி மறையும் புன்னகையும், நல்ல பணி தனக்குத் தரப்பட்டிருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

தொழிலால், அவர் பழுதுபட்ட ஊர்திகளைச் செம்மைப்படுத்தும் உழைப்பாளி. அதைப்போலவே இன்று ஏற்றுக்கொண்ட பணியால், நகரிலே காணப்படும் பழுதுகளைச் செம்மைப்படுத்திச் செயலாற்றுவார் என்பது உறுதி!

எண்ணங்களை எழுதுங்கள்!

முரசொலி பொங்கல் மலரை திராவிடம் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறது என்பதை நாமறிவோம். அதன் சிறப்புகள் என்ன; என்ன—என்ற விளக்கங்கள் தரத் தேவையில்லையென்றே கருதுகிறோம்.

"முரசொலி — பொங்கல் மலர்"—இந்தச் செய்தியே உங்களுக்கு இனிப்பூட்டக்கூடியது — மலர் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்ற எண்ணங்களை எழுதுங்கள் — இயன்றவரை செயலாற்றி உங்கள் சிந்தை மகிழ வைக்கிறோம் — அத்துடன்,

மலர் எவ்வளவு ரூபாய் விலையில் வெளியிடலாம் என்ற கருத்தையும் உடன் எழுதுங்கள். இது மிக முக்கியம்; உடன் தெரிவியுங்கள்.

[கடிதம் எழுதுவோர் முழு முகவரி தர வேண்டுகிறோம்.]

பொறுப்பாளர்,
பொங்கல் மலர்,
"முரசொலி",
சென்னை—6

ரோமாபுரி...

[7—ம் பக்கத் தொடர்ச்சி]

பாகக் காணப்பட்டார்கள். அவர்களுடன் தமிழர்கள் உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள். யவனர்களின் தோள் மீது கைபோட்டவாறு தமிழர்கள் அங்குமிங்கும் உலவிக் கொண்டிருந்தனர்.

எல்லாவற்றையும் பார்த்தவாறு பெருந்தேவி குதிரையை மெதுவாக வீதிகளில் ஓட்டிக் கொண்டிருந்தாள். உலகத் தொடர்பு கொண்ட இவ்வளவு பெரிய நாட்டைத் தோற்கடிப்பது என்பது முடிகின்ற காரியமா? — எனத் தனக்குள்ளே கேட்டுக்கொண்டாள். இருங்கோவேள், அவள் எதிரே நிற்பதுபோல் ஒரு நினைவு. அவன் அவளுக்கு அந்த லட்சியத்தை ஞாபகப்படுத்துவது போல் ஒரு உணர்வு.

இறுதியாக அவள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு அரண்மனையை நோக்கிக் குதிரையைத் தட்டிவிட்டாள். எப்படியாவது அரண்மனையில் நுழைய வேண்டும். கரிகாலனைக் கொல்லவேண்டும். தன் கணவனின் இருதயத்தில் மகிழ்ச்சி ததும்பச் செய்ய வேண்டும். அவன் முகம் மலர வேண்டும். அதைப் பார்த்துவிட்டுப் பிறகு சாகவேண்டும். அய்யோ பாவம்! பூம்புகாரில் உற்சாகத்துடன் நடமாடும் இந்த மக்களெல்லாம் இன்று மாலைக்குள் ஒரு பயங்கரமான செய்தி கேட்டு மயங்கி விழப் போகிறார்கள். அந்தச் செய்திதான் 'கரிகாலன் மடிந்தான்' என்ற செய்தி.

அந்தக் காரியத்தை செய்யப் போகிறவள் இந்தப் பெருந்தேவிதான்!

இவ்வாறு ஆவேசத்துடன் கூவினாள் பெருந்தேவி. நல்ல வேளையாக யாரும் அவளைக் கவனிக்கவில்லை. அவளும் மக்கள் கூட்டத்தைவிட்டு அரண்மனைப் பக்கம் வந்துவிட்டாள்.

அரண்மனைக் கதவுகள் மூடப்பட்டிருந்தன. குதிரையுடன் வெளியிலேயே நின்றுகொண்டு உள்ளே செல்வதற்கு வழி என்ன என்று யோசித்தாள்.

[தொடரும்]

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம் 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6, தமிழ்நாடு